# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 03 ஞாயிற்றுக்கிழமை (19-07-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 199

## புங்குருதீவு பகுதியில் படையினர் தேடுதல்

### கிளைமோர் கண்ணிகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

கடந்த புதன்கிழமை புங்குடுதீவில் கடற்படையினர் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டதாக பலாலி இராணுவத் தலைமையகச் செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது.

இந்த தேடுதலின் போது இரு கிளைமோர் கண்ணிகள் கைப்பற்றப்பட்டதாகவும் —

இரு கண்ணிகளும் தலா 8 கிலோ நிறை உடையவை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த படை நடவடிக்கையின் போது எவரும் கைதானதாகத் தகவல் இல்லை. (இ)

## ஆலோசனை குழுவிலிருந்து இராஜினாமா

கொழும்பு, ஜூலை 19

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து புனர்வாழ்வு அமைச்சுக்கு ஆலோசனை வழங்கும் எம்.பிக்களின் குழுவில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மழை தொடர்கிறது தெற்கில் வெள்ளம்

கொழும்பு, ஜூலை 19

கொழும்பு நகரப்பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் கடந்த வியாழன் நள்ளிரவு ஆரம்பித்த மழை நேற்று இரவு வரை தொடர்ந்து பெய்துகொண்டிருந்தது.

கொழும்பு மாநகரப் பகுதியிலும், அதன் சுற்றுப்புறப் பகுதியிலும் வெள்ளத்தினால் பல்வேறு சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன், வீதிப்போக்குவரத்தும் பல இடங்களில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளன.

அதேசமயம் வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மாங்குளம், குஞ்சுக்குளம் பகுதிகளில் நேற்று மோதல்!

## பெற்றோல் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணப் பகுதியில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் நிலையங்களில் நிலவும் பெற்றோல் தட்டுப்பாட்டை அடுத்து தனியார் எரிபொருள் வியாபாரிகள் பெற்றோலை கூடுதல் விலைக்கு விற்கின்றனர். (இ-15)

## இழப்பு குறித்து தகவல் இல்லை

கொழும்பு, ஜூலை 19

மாங்குளத்திலும், குஞ்சுக்குளத்திலும் நேற்று படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகம் தெரிவித்தது

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சில நாள்கள் இடைவெளியின் பின்னர் நேற்று மீண்டும் மோதல்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)



திருமலைக்கு வரவிட்டால் உண்ணாவிரதம் தொடங்கி விடுவினம் எண்டு நினைக்கினம் போல......!

## 80 ஆம் வயதில் மண்டேலா மூன்றாவது திருமணம்

### மணமகளுக்கு 52 வயது

தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தனது 80 ஆவது பிறந்த தினமான நேற்று மூன்றாவது தடவையாக திருமணம் செய்து கொண்டார்.

நெல்சன் மண்டேலா நேற்று யோகன்ஸ் பேர்க்கில் உள்ள தனது வீட்டில் 80 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். அச்சமயம் அங்கு வருகை தந்திருந்த பிரமுகர்கள் மத்தியில் கிளாஷா மாஷேல் (வயது 52) என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

கிளாஷா மாஷேல் மொசாம்பிக் நாட்டின் முன்னாள் தலைவர் மோரா மாஷேலின் மனைவி ஆவார்.

1986 ஆம் ஆண்டு நடந்த விமான விபத்து ஒன்றில் மோரா மாஷேல் உயிரிழந்தார்.

அதன் பின்னர் மண்டேலாவுடன் மிக நெருக்கமாக இருந்த கிளாஷாவை நேற்று மண்டேலா திருமணம் செய்து கொண்டார். (இ-9)

## அனுமதி பெறாதகடைகள் நகரில் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். நகரில் அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டிருந்த சில கடைகள் பொலீஸாரின் துணையுடன் மாநகரசபையினரால் நேற்று அகற்றப்பட்டுள்ளன.

யாழ். நகரப் பகுதியில் மின்சார நிலைய வீதியையும் ஸ்ரான்லி வீதியையும் இணைக்கும் புதிய வீதியின் அரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் எம்.பி. அவரது மகன் பூதவுடல்கள் நல்லடக்கம்

வவுனியா, ஜூலை 19

கடந்த புதன்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற கிளைமோர் வெடிச் சம்பவத்தில் கொல்லப்பட்ட வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதன். அவரது மகன் வத்சலன் ஆகியோரின் இறுதிச் சடங்குகள் நேற்று வவுனியாவில் இடம்பெற்றன.

நேற்று மாலை 3 மணி வரை வவுனியா நகரசபை மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காகப் பூதவுடல்கள் வைக்கப்பட்டிருந்தன. மாலை 3 மணிக்கு இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன், உப தலைவர் மாணிக்கதாஸன், நாடாளுமன்ற உறுப்பினர் பாலச்சந்திரன், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜெயலத் ஜெயவர்த்தனா, ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் எஸ். ஸ்ரீதரன், ரெலோ அமைப்பின் முதல்வர் சிவாஜிலிங்கம், மாகாண சபைசெயலாளர் ஜி கிருஷ்ணமூர்த்தி, வர்த்தக சங்கத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரிப் பகுதியில் மோதல் சம்பவம்

கொழும்பு, ஜூலை 19

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

படையினர் விடுதலைப் புலிகள் மீது மறைந்திருந்து தாக்குதல் நடத்தினர் என்றும் —

இச்சம்பவத்தின் பின்னர் தேடுதல் நடத்திய படையினர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை நிச்சயமான பின்பே அகதிகள் திருமலைக்கு வந்துசேர்வர்

### வவுனியா, மன்னாரில் தங்கவைக்க முடிவு

திருகோணமலை, ஜூலை 19

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவை குறித்து உறுதியான பதில் எதுவும் கிடைக்கும் வரை மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் அகதி முகாம்களில் தங்கியுள்ள யாழ். அகதிகள் திருமலைக்கு அழைத்து வரப்படமாட்டார்கள்.

இவ்வாறு திருமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் எஸ். வேலும் மயிலும் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களில் இருக்கும் அடிப்படை வசதிகள் திருமலை கண்ணாடித் தொழிற்சாலையில் உள்ளமுகாமில் இல்லை.

இதனால் கடந்த 16 ஆம் திகதி லங்காமுடித கப்பல் மூலம் யாழ். சென்றடைந்த ஆயிரத்து 23 அகதிகள் திரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் கைது ஜனாதிபதி கவனத்துக்கு

கொழும்பு, ஜூலை 19

'வீரகேசரி' பத்திரிகையின் கொழும்பு அலுவலகச் செய்தியாளர் எஸ். ஸ்ரீகஜன் இரகசிய பொலீஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் குறித்து சர்வதேச செய்தியாளர் சங்கம் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது.

வீரகேசரி செய்தியாளர் என்ற ரீதியில் கைது செய்யப்பட்டிருந்தால் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என மேற்படி சங்கம் கேட்டுள்ளது.

இவரது உறவினரான ஆசிரியை மற்றும் அரச சேவையில் உள்ள இரு பெண்கள் கைது செய்யப்பட்டு அளித்த வாக்குமூலத்தை அடுத்தே ஸ்ரீகஜன் கைதானார் என்று கூறப்படுகிறது. (இ-21)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மாதுசிரோன்மணி சோமசுந்தரம்

திருமதி மாதுசிரோன்மணி சோமசுந்தரம் அவர்கள் 1998 – 07 – 17 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற காரைநகர் வைத்திலிங்கம் சோமசுந்தரத்தின் மனைவியும், முகுந்தன், நிமலன் ஆகியோரின் அருமைத் தாயாரும், சுழிபுரம் வைத்திலிங்கம் தம்பதிகளின் மகளும், திருமதி கா. பொ. இரத்தினம் அவர்களின் சகோதரியும், இ. வை. பொன்னம்பலம் அவர்களின் அண்ணியும், காமினி, சந்திரலோஜினி ஆகியோரின் மாமியாரும், சவுந்தராம்பிகை, சிற்சபேசன், வைத்தீஸ்வரன், சாந்தநாயகி ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 19-7-98 இல் கொழும்பில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனம் கனத்தை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
மு. திருஞானசம்பந்தபிள்ளை

கொக்குவில். (57679)

## செல்வி வனஜா தவேந்திரன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஆலங்குளம் துணுக்காயில் வசித்தவருமாகிய செல்வி வனஜா தவேந்திரன் காலமானார்.

இவர் மாவிட்டபுரம் அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது துணுக்காயில் வசிப்பவருமாகிய கனகநாயகம், தவேந்திரன் (காந்தி), பாக்கியலட்சுமி (பாக்கியம்) தம்பதிகளின் கனிஷ்டபுத்திரியும் யாதவன், சுகன்யா ஆகியோரின் பாசமிகு தங்கையும் காலஞ்சென்ற ஆசிரியர் வல்லிபுரம் தில்லைமுத்து ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16- 7- 98 வியாழக்கிழமை மல்லாவியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. நல்லதம்பி
(மாமன்)

'வல்லிபுர வாசா'
அளவெட்டி மேற்கு.
அளவெட்டி. (57680)

## கந்தையா தவநாதன்

யாழ்ப்பாணம் ஸ்ரேஷனடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் தலையாழியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தவநாதன் 18 – 7 – 98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா ராசம்மா தம்பதிகளின் புத்திரனும், முத்துப்பிள்ளை யோகம்மா (மிருக வைத்திய போதனாசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், சிவசக்தியின் அன்புத் தகப்பனாரும், ராஜேஸ்வரி, கனகேஸ்வரி, கதிர்காமநாதன், பாலச்சந்திரேஸ்வரி, சற்குணேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், கந்தையா, காலஞ்சென்ற அன்னம்மா ஆகியோரின் மைத்துனரும், பற்குணம் அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொக்குவில் தலையாழி வைரவ கோயில் முன்பாக உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (19 – 7 – 98) பகல் 11 மணிக்கு தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பீ. கருணாநிதி
(சாயி போட்டோ)

(57698)

## அமிர்தலிங்கம் சின்னம்மா

[வடலியடைப்பு]

வடலியடைப்பு வாசியான காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் (முன்னாள் சுங்கப்பகுதி ஊழியர், மலேசியா) அன்பு மனைவி சின்னம்மா 18-7-1998 அன்று காலமானார்.

இவர் நாகேஸ்வரி (பொறுப்பதிகாரி,- பண்டத்தரிப்பு பிரதேசசபை) அன்புத் தாயாரும், சரவணபவன் (ஊழியர், ப. நோ. கூ. ச., மானிப்பாய்), விக்கினராஜா ஆகியோரின் சிறிய தாயாரும், சபா. நாராயணன் (கிராம சேவையாளர் – சில்லாலை வடக்கு J/148), பாலச்சந்திரன் (பிரான்ஸ்), பேரின்பநாயகம் (இத்தாலி), மங்கையர்க்கரசி (கிளிநொச்சி), பாக்கியநாதன் (கிளிநொச்சி), சிவநேசன் (கிளிநொச்சி) ஆகியோரின் சிறிய தாயாரும், சுப்பிரமணியம், தெய்வேந்திரம் (தேநீர்க்கடை, சங்கானை), சண்முகராசா (தேநீர்க்கடை, சங்கானை), சிவபாதம் (தேநீர்க்கடை, சங்கானை), அஞ்சலாதேவி (நீர் (கொழும்பு), தர்மபாலன் (கனடா), சிவசுந்தரம் (கனடா), மகேந்திரராசா (கனடா), ரவீந்திரன் (கனடா), நகுலேந்திரன் (கனடா), சுசிலாதேவி (கனடா), சற்குணதேவி (கனடா), பாலநாராயணன் (கனடா), தயாளகுணதேவி (கனடா) ஆகியோரின் பெரியதாயாரும், திருமதி பத்மாவதி நாராயணன் (பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர், வலி. மேற்கு, பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வடலியடைப்பில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளிமயானத்திற்கு 19-7-98 இன்று 1 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சபாபதி நாராயணன்
(கிராம சேவையாளர், சில்லாலை,
வடலியடைப்பு)

(57692)

## நன்றி செலுத்தும் ஆராதனை

யாழ்ப்பாணம், ஜூலை 19 ஆச்சிரம வாழ்வில் 50 ஆண்டுகளை நிறைவுசெய்த அருள் திரு சேவக்சாம் ரி. அல்பிரட் (சாம் அண்ணை) அவர்களின் சேவையை நன்றி கூறும் வகையிலான விசேட ஆராதனை இன்று மாலை 3. 30 மணிக்கு யாழ். 4 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள "சிற்றி மிஷன்" தேவாலயத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் இந்த விசேட நன்றிசெலுத்தும் ஆராதனையை ஒழுங்கு செய்துள்ளது. (இ–7)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
மம்முட்டி - அஞ்சு
கோசி, மஞ்சுளா
விஷ்ணுவரதன் நடித்த
சத்ரிய
வம்சம்
அடுத்த வெளியீடு!
இந்தியன்
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4222)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று மட்டும்
விஜயகாந்த் - ப்ரிதா
ஆகியோர் நடித்த
தர்மா
திங்கள், செவ்வாய்
பிரபுதேவா, சரத்குமார்
ரோஜா, மனோரமா
நடித்த
இந்து
நேரம்:-10 -30, 2-30
(பழைய நேரம்)
Tele. No: 070 - 212223
(57502)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
அகல வெண் திரையில்
ஒன்பது வருட இடைவெளியின் பின் மீண்டும்
திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படங்கள்
காண்பிக்கப்படுகின்றன.
சுப்பஸ்டார் ரஜனி
மீனா - செந்தில்,
வடிவேல் நடித்த
முத்து
(சினிமாஸ்கோப்)
காட்சிகள்:- 10-30, 2-30
(57685)

தேவை
தட்டெழுத்தாளர்/
பகுதிநேர ஆசிரியர்கள்
(ஆண்டு 1 – 11 வரை)
பதவிகளுக்குரிய
விண்ணப்பங்களை
27-07-98 -ம் திகதிக்குள்
சமர்ப்பிக்கவும்.
நியூ பிறைற்
கல்வி நிலையம்
யா/ மாட்டின் வீதி.
(57684)

மாதாந்த
பயிற்சிப் பரீட்சை
(ஜூலை)
வினாத்தாள்கள்
(2 ஆம் தவணை)
இன்று முதல்
பெற்றுக்கொள்ளலாம்.
BOND யாழ். நகர்.
(57702)

# வாழ்த்துகின்றோம்

உ

கலைஞர்களுக்கான 'கலாபூஷணம்' விருது பெறும்

தேர்ச்சுரபி விஸ்வப் பிரம்மஸ்ரீ
உயர்திரு. ஆறுமுகம் ஜீவரட்ணம்
(காளி கோயிலடி, திருநெல்வேலி)
அவர்களையும்

வில்லிசைக் கலைஞர் கலாவித்தகர்
உயர்திரு. நா. கணபதிப்பிள்ளை (சின்னம
(அச்சுவேலி)

அவர்களையும் சகல சிறப்புக்களுடனும் பல்லாண் காலம் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

லிங்கம்ஸ்
(பந்தல் அமைப்பாளர்)
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

சி. நாகலிங்கம்
தலைவர்,
தேர்த் திருப்பணிச்சபை
மூத்த விநாயகர் கோவில்.

(57683)

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பையா செல்வநாயகம்
(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்
14 - 11 - 1923

மறைவு
30 - 07 - 1997

திதி 19 - 07 - 1998

அன்புதனை அருவியாக்கி பண்புதனைச் சிகரமாக்கி, மக்கள் ஐவரை நல்வாழ்வு வாழ வைத்த அப்பாவே!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

- குடும்பத்தினர்

345, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம். (57688)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை மருதடியான்

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்கன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மருதடியான் வவுனியாவில் காலமானார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நாகமுத்து, சுந்தரம்பிள்ளை, பொன்னம்பலம், சின்னத்தம்பி மற்றும் செல்லையா தில்லைவனம் ஆகியோரின் சகோதரனும் மகாதேவா, (நெ. ச. தி. வவுனியா) பத்மநாதன் (ரெலிக்கொம், வவுனியா), சிவகாமசுந்தரி, நாகராசா (ரெலிக்கொம் யாழ்ப்பாணம்), மகேஸ்வரன் (ஜேர்மனி), வாலாம்பிகை, மனோகரன், ஞானாம்பிகை, கனகாம்பிகை ஆகியோரின் பாசமிகு தந்தையும், தில்லைநாதன் (ரெலிக்கொம், யாழ்ப்பாணம்), தனலெட்சுமி, இந்திராதேவி, மங்கையர்க்கரசி, இராஜேஸ்வரி, சாந்தகுமார், உதயகுமாரி, சாந்தன், கனகரெத்தினம் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, பார்வதி, மருதடியார் மற்றும் அமராவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-07-98) 4 மணியளவில் வவுனியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. நாகராசா (மகன்)
(கந்தரோடை)
பொ. தில்லைநாதன்
(மருமகன்)

981/12, சுவாமியார் வீதி,
வளன்புரம்,
கொழும்புத்துறை. (57699)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பூமியைக் குளிர்விப்போம்; இல்லையேல் அனர்த்தம் புரிவாள்!

## மரக்கன்றுகளை பரிசுப் பொருளாக வழங்கும் பழக்கத்தை கொள்ளுங்கள்

நாம் வாழும் சுற்றாடல் (சூழல்சுற்றுச்சூழல்) என்பது நம் வீட்டினுள்ளிருந்தே தொடங்குகின்றது. வீடு சுத்தமாக இருக்க வேண்டும். வீட்டைச் சுற்றியுள்ள இடங்கள் சுத்தமாகக் கூட்டப்பட்டு இருக்கவேண்டும், குப்பைகள் அதற்கென வெட்டிய குழிகளில் இட்டு அகற்றப்பட வேண்டும்.

ஒவ்வொரு வீடும், ஊரும் நாடும் சுத்தமாகவும் சுற்றுப்புறத் தூய்மையுடனும் இருக்குமானால் இந்த உலகமே நல்ல சுற்றாடலுடன் இருக்கும்.

சுற்றாடல் என்பதில் இரண்டுவகைகளை நாம்நமது சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளலாம்;

1) அகச்சுற்றாடல் (Internal Environment)

2) புறச்சுற்றாடல் (External Environment)

### அகச்சுற்றாடல்

நமது உடலினுள் இருக்கும் உறுப்புக்கள் கொண்ட உட்பகுதியைநமது அகச்சுற்றாடல் என்று சொல்லலாம். இந்த அகச்சுற்றாடல் ஆரோக்கியமாக இருந்தால் தான் நாம் வாழ முடியும். எல்லா உறுப்புகளும் ஆரோக்கியமாக இருக்க, ஓர் உறுப்பு மாத்திரம் கெட்டுப்போகுமானால் எம்மால் வாழமுடியாது. எல்லா உறுப்புக்களினதும் இணைந்த செயற்பாடே உயிர் வாழ்வு ஆகும்.

இந்த அகச்சுற்றாடலை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும். சத்துணவுகள் உண்பதோடு அகஉறுப்புக்களைப் பழுதடையச் செய்யும் குடி, போதை, புகை இவற்றைத் தவிர்த்து நல்லொழுக்கமாக வாழ வேண்டும். இவற்றில் எதற்காவது அடிமையானால் வாழ்வின் வழிமுறை மாறுவதோடு உறுப்புக்கள் கெடுவது உறுதியாகிவிடும்.

அக உறுப்புக்களைப் பேணுவதில் யோகாசனம் மிகவும் பயனுடையது. யோகாசனத்தைத் தகுந்த குரு மூலம் பழக வேண்டும். நோய்வாய்ப்பட்டவர்கள் கூட தகுந்த யோகாசனம் செய்வதன் மூலம் நோய்களைத் தவிர்த்துக் கொண்டு ஆரோக்கியமுடையலாம். முக்கியமாக சுவாசப்பயிற்சி, நாடிசுத்தி மூலம் அதிகளவு ஒட்சிசனை உள்ளிழுத்து தேகத்தை ஆரோக்கியமாக்கலாம்.

யோகப் பயிற்சியில் பிராணாயாமம், சாந்தி ஆசனம் என்பவை முக்கியமானவை. பிராணாயாமம் மனதை ஒரு நிலைப் படுத்தவும் உடலுக்குத் தேவையான ஒட்சிசனை அளிக்கவும் சுவாசப் பாதையைத் தடையற்றதாக்கவும் மிகவும் சிறந்தது.

சாந்தியாசனம் எல்லா ஆசனங்களும் செய்த பின்னர் செய்வதாகும். தசைநார்களை இளக்கி நிமிர்ந்த நிலையில் அவயவங்களுக்கு ஒய்வு கொடுத்த நிலையில் படுத்திருத்தலாகும். இந்நிலையில் ஒவ்வொரு உறுப்பும் ஒய்வு பெறுகின்றது. இதயம் மெதுவாக இயங்கிக் கொண்டிருக்கும். இதனால் இரத்த அழுக்கம் போன்ற நோய்கள் தணிகின்றன.

### புறச்சுற்றாடல்

நாம் வாழும் இடம் புறச் சுற்றாடல் ஆகும். நமது வீடு அதன் சுற்றுப்புறம், நாடு, உலகம் என்பன நமது சுற்றாடல் ஆகும். இவற்றை நம்பியே நாம் வாழ்கிறோம். நமது செயல்களால் இதனை அழித்து விடாது பேணிப் பாதுகாக்க வேண்டும்.

சுற்றாடலிலுள்ள மரங்களே மனிதனை வாழவைக்கின்றன. அந்த மரங்களை நாம் தேவையில்லாமல் அழித்து விடக்கூடாது.

உலகில் இருந்த காடுகளில் பெரும்பகுதி மனிதனால் அழிக்கப்பட்டு விட்டன. காடுகள் நாட்டின் செல்வங்களாகும்.

மழைவீழ்ச்சி காடுகளாலேயே ஏற்படுகின்றது. இலைகள் ஆவியுயிர்ப்பினால் இழக்கின்ற நீரே மழையாகப் பெய்கிறது.

உயிரினங்கள் - மனிதன் முதற்கொண்டு மற்ற ஜீவராசிகள் வரை — வெளிவிடுகின்ற காபனீரொட்சைட்டைத் தாவரங்களே தமது உணவுத் தயாரிப்புக்காக உள்ளெடுத்து - சூரிய ஒளியிருக்கும் போது - ஒட்சிசனை வெளிவிடுகின்றன. இந்த ஒட்சிசன் உயிரினங்களின் சுவாசிப்புக்கு உதவுகிறது.

இந்த ஒட்சிசன் — காபனீரொட்சைட்டு சமநிலையைப் பேணுவதற்குத் தாவரங்களே உதவுகின்றன. தாவரங்கள் இன்றேல் காபனீரொட்சைட்டின் அளவு வளிமண்டலத்தில் அதிகரித்துக் கொண்டே செல்லும். பூமி, மனிதன் வாழ முடியாத இடமாக மாறும்.

### அதிக வெப்பம்

காடுகள் அழிக்கப்பட்டு அவை குறைந்து விட்ட படியாலும் மனிதன் தாவரங்களை ஒருதிட்டமின்றி அழித்தொழிப்பதாலும் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது; வெப்ப நிலையும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. இந்தியாவில் அண்மையில் 49 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ளது. சில மனிதர்கள் இவ்வுயர் வெப்பத்தால் இறந்துமுள்ளனர்.

நமது குடா நாட்டிலும் வெப்பநிலை உயர்வை அவதானித்திருப்பீர்கள். யாழ்பஸ் நிலையத்தில் நிழலின அருமையை பலரும் உணர்ந்திருப்பர். இரண்டு மூன்று மரங்கள் வளரத் துடித்துக் கொண்டு நிற்க அதற்குள் பலர் நிழல் தேடிநிற்பர் (நிழற்குடைகள் அமைப்பதற்கு முன்னர்).

இந்த வெப்பநிலைஉயர்வு துருவங்களில் மிதந்து கொண்டிருக்கும் பனிக்கட்டி மலைகளை (Ice bergs) டைட்டானிக் கப்பலை உடைத்துச் சிதைத்து மூழ்கச் செய்தது போன்ற பனிமலைகளை-உருகச்செய்யும். இதனால் கடல்மட்டம் உயரும்.

தொழிற்புரட்சிக்குப் பின்னர் உலகம் அரைப்பாகை சூடு ஏறியிருக்கிறதென்றும், இப்போது வளர்முக நாடுகள் வெளியேற்றும் காபனீரொட்சைட்டினால் நூறு வருடத்தில் மூன்று பாகை வெப்பம உயரும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனா.

மூன்று பாகைதானே,

(4 ஆம் பக்கம் பார்க்க)

**இர. சந்திரசேகர சர்மா**

## சூரியகாந்தி
## உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## எதிரொலி

- செம்மணியிலுள்ள புதைகுழிகள் தோண்டப்பட வேண்டும் எனப் பலர் வற்புறுத்துகின்றனர்.
  - ★ புதைபொருள் ஆராய்ச்சியினாற் சரித்திரமே மாறக்கூடிய சாத்தியம் உண்டு.
- யாழ்ப்பாணத்தில், இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை நிறுத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.
  - ★ ''சுதந்திரம் வேண்டாம்; சோறுதான் வேண்டும்'' என்ற குரல் பரவலாக - பலமாக ஒலிக்க வேண்டும் என அரசு விரும்புகின்றதோ?
- யாழ்ப்பாணத்திலே பாலில் அதிக தண்ணீர் கலக்கப்படுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
  - ★ யாழ்ப்பாணத்திலே தண்ணீருக்குப் ''பால்'' என்ற பெயரும் இருக்கின்றது என்ற நிலை உருவாகுமோ?
- ஜனாதிபதி தன் பிள்ளைகளுடன் வெளிநாடொன்றிற்குச் சென்றார், எங்கே என்பது அறிவிக்கப்படவில்லை.
  - ★ நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதும் தெரியவில்லை; நாட்டின் தலைவி எங்கே போகின்றார் என்பதும் தெரியவில்லை; எல்லாம் தணிக்கை மயம்!
- போரிலே வெற்றியை ஈட்டிக் கொடுத்தால், அநுருத்தரத்வத்தைக்குப் பிரதமராகும் தகுதி ஏற்படும்!
  - ★ அடிக்கடி ''காலக்கெடு'' விதிப்பவருக்கு விதிக்கப்பட்டுள்ள ''பதவிக்கெடு'' என இதைச் சொல்லலாமோ?
- மலையகத்திலே தொண்டர் படை உருவாக்கப்படுவதற்கு மகா சங்கம் கடும் எதிர்ப்பு.
  - ★ தொண்டர் படை இயங்குவது மகா சங்கடமாக இருக்கப்போகின்றது!
- அனுராவுக்கு எதிராக ஐ. தே. க. வுக்குள்ளே போர்க் கொடி.
  - ★ புகுந்த வீடு ''போ போ'' என்கின்றது; பிறந்த வீடு ''வா வா'' என்கின்றது!
- பட்டினியால் வாடும் ஈழத் தமிழர்களுக்குப் பாரத நாடு உணவுப் பொருள்களை அனுப்ப வேண்டும் என முன்னாள் அமைச்சர் ராஜாராம் கூறுகின்றார்.
  - ★ ஆகா! (யம்)!; ஆகா! (ரம்)!
- பிரதமர், ஜனாதிபதி, லக்ஷ்மன் ஜெயக்கொடி ஆகியோரே நேர்மையான அரசியல் வாதிகள் என்கின்றார் அனுரா
  - ★ அவர்கள் நேரான வழியிலே செல்கின்றார்கள் என்று புகழ்வதன் மூலம் இவர் ஏதோ ஒன்றுக்குக் குறுக்கு வழி தேடுகின்றாரோ?
- பொலிஸ் நிலையங்களில் மனித உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க விசேட பொலீஸ் அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.
  - ★ கள்வனைப் பிடிக்க வேறொரு கள்வனைப் பயன்படுத்தும் முயற்சி!

— இடியன்

## அன்புநிறை அம்மாவே ...!

அம்மா, இது சென்ற வாரம் எழுதிய கடிதத்தின் மிகுதிப் பகுதி.

அது சரி. கல்யாணத்துக்கும் ஏன் ஆடம்பரச் செலவுகள்? இன்றைக்கு ஆடம்பரமாக கல்யாணத்தைச் செய்து போட்டு எதிர் காலத்தில் அடிப்படைத் தேவைகளுக்கே அந்தரப்படுகின்ற ஆக்களை நாங்கள் நடைமுறையிலேயே காண்கிறோம். அதையும் இயன்றளவு எளிமையாகச் செய்யலாம் தானே. ஒரு நாள் கூத்துக்கு

> **மடல் மோதல்**
>
> அம்மாவுக்கும் மகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் மடல் மோதலில் மகளின் நீண்ட கடிதத்தின் பிற்பகுதி இதுவாகும். முற்பகுதி சென்ற வாரம் பிரசுரமானது
>
> இந்த மடலை வரைந்தவர் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த
>
> **நா. விமலாம்பிகை**

வாயைக்கட்டி வயித்தைக்கட்டி யாரோ சேர்த்து வைத்த சொத்தை அழிக்கிற கொண்டாட்டமாகத் தான் நான் ஆடம்பரக் கல்யாணங்களையும் நினைக்கிறேன்.

இன்றைய இளந் தலைமுறைப் பெண்கள் செய்யிற கூத்துக்கள் என்று பெரிதாக எழுதியிருந்தாய். அதைச் செய்கிறவர்கள் ஒரு வீதம் கூட இருப்பார்களோ தெரியாது. ஏனம்மா பொதுமைப்படுத்திப் பார்க்கிறாய். உன்னுடைய காலத்தைப்பற்றி ஒப்பிட்டு ஒப்பிட்டு எழுதியிருந்தாய். நீங்கள் அந்தக் காலத்தில் சுமக்காத எத்தனையோ பெரிய சுமைகளை என் சமகாலப் பெண்கள் சுமக்கின்றார்கள். அன்று அண்ணனும் அப்பாவும் தம்பியும் சைக்கிளில் ஏற்றி இறக்க, வெளியுலகம் தெரியாமல் தன்னிலை பற்றிய உணர்வுமில்லாது, பிரச்சினைகளை எதிர்கொள்ளாமல் நீ இருந்தாய்.

இன்று என்னொத்த சகோதரிகள் சைக்கிள்களில் தாயை-தந்தையை இருத்தி உன்னி உன்னி உழக்குகிறார்கள். சந்தைக்கும் சங்கக் கடைக்கும் மற்றும் தேவைகளுக்குமாய் ஓடி ஓடிக் குடும்பத்தைத் தாங்குகிறார்கள். உழைத்துக் குடும்பச் செலவினைப் பொறுப்பேற்கிறார்கள். ஆணுக்கு, ஆணாய் பெண்ணுக்குப் பெண்ணாய் அவர்கள் தாங்கும் சுமை ஏனம்மா உன் கண்களைச் சுடவில்லை.

சேலை, சட்டை போட்டு பின்னிச்சடை கட்டி வெளிக்கிடத்தான் எம் போன்ற பெண்களுக்கு ஏது நேரம்? அதற்கு மினக்கெட்ட நேரத்தில் நாலு பயனுள்ள வேலைகளைச் செய்து முடிப்போம். என்னொத்த பெண்ணுக்கு இன்றைய அவசர சூழலில் அன்றாட பாவனைக்கு சேலையுங்கூட ஒரு தடை தானே. சேலையோடு சைக்கிள் ஓடும் பொழுது விபத்துக்களையும் எதிர்கொள்ள நேரிடுகிறது. வீதிகளில் ஏறி இறங்கும் பிரச்சினை ஒரு புறம் அம்மா.

சேலை பண்பாட்டு உடைதான். மறுக்கவில்லை 'தேவை மாற்றங்களின் தாய்' இன்றைய பெண்ணுக்கு ஏற்பட்டிருக்கும் தேவை (வெளியுலத் தொடர்பு, சமூகப் பங்களிப்பு) அவளது உடைத் தேர்வில் மாறுதலை வேண்டி நிற்கிறது. வெளியுலக வாழ்விலும் சமூகக் கடமைகளிலும் அதிகரித்த தேவையானது, ஆண்களைப் பெரும்பாலும் வேட்டியைத் தவிர்த்து மேலைத்தேய உடையை அணிய வைக்கவில்லையா? அது இன்று உத்தியோக உடையாக மாறவில்லையா? 'அல்லன தள்ளி நல்லன நாடி' பண்பாட்டம்சங்களின் புறப் பெறுமதிகள் (உடை, உணவு, எழுது கருவி) தேவைக்கேற்ப மாற்றம் பெறுவதில் தவறென்ன

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சமய, சமூகப் பணியின் போது

# ஐக்கியம் நாடும் தொண்டர்

**அருள்திரு. டி. ஆர். அம்பலவாணர்**

கிறிஸ்து சேவ ஆச்சிரமத்தின் இன்றைய பிரதம சேவகர் அருள்திரு. அண்ணன் சாம் அல்பிறட் அடிகளார், தம் வாலிப வயதில் ஆச்சிரமத் தொண்டனாகச் சேரும்படி கிடைத்த அழைப்பையிட்டு, ஆழமாகச் சிந்தித்துத் தியானத்தில் இருக்கும் போது —

''என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்...''

''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை கைவிடுவதுமில்லை.'' — என்ற தெய்வீகத் தொனியைத் தெளிவாகக் கேட்டார்.

'கண்டேன் என் கண்குளிரக் கர்த்தரையின்று ...'' என்று பெருமகிழ்ச்சியுடன், 'இதோ அடியேன இருக்கிறேன் என்னை அனுப்பும்' என்று ஆச்சிரமப் பணிசெய்யத் தன்னை அர்ப்பணித்தார்.

1948 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் நாள் ஆச்சிரமத் தலைமைச் சேவார் அமரர் அருள்திரு. செல்வரத்னம் அடிகளாரின் தலைமையில் சகோதரன் சாம் அல்பிறட் அவர்களை ஆச்சிரம ஐக்கியத்திற்கு ஒரு தொண்டனாக ஏற்கும் அர்ப்பணிப்பு வழிபாடு நடைபெற்றது. இவ்வாண்டு கடந்த மே மாதம் 22 ஆம் திகதி இந்த நாளை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரிக் குடும்பத்தினர் ஆச்சிரமத்தில் ஐக்கிய வழிபாட்டை நடத்திச் சிறப்பாகக் கொண்டாடினர்.

கிறிஸ்துவ சேவஆச்சிரமத்தை நிறுவிய அமரர் எஸ், செல்வரத்ன அடிகளாரின் மறைவிற்குப் பின், 1973 ஆம் ஆண்டு தொடங்கி, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக சாம் அண்ணன் அவர்கள் சுன்னாகத்திலும், மட்டக்களப்பில் கிராவிலும்



சாம் அல்பிறட் அடிகளார்

உள்ள ஆச்சிரமங்களின் முழுப் பொறுப்பையும் ஏற்றுச் சிறப்பாக நடத்தி வருகிறார். 1995 ஒக்ரோபர் மாதத்தில் நடைபெற்ற பெரும் இடப்பெயர்வினாலும், போரின் விளைவினாலும் சுன்னாகத்திலுள்ள ஆச்சிரமம் அதிகமாகப் பாதிக்கப்பட்டது. இராணுவக் கெடுபிடிகளினாலும், எறிகணைத் தாக்குதலினாலும் ஆச்சிரமத்தின் பலகட்டடங்கள் சிதைந்து விழுந்தன. உள்ளூர்த் திருடர்கள் ஆச்சிரமத்தின் பொருள்களை, குறிப்பாகச் செபாலயத்திலுள்ள அனைத்துப் பொருள்களையும் அபகரித்து விட்டனர்.

இந்த அழிவுகள் நடைபெற்ற நாள்களில் கிரான் ஆச்சிரமத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த சாம் அண்ணன் அதிகமாகப் பாதிக்கப்பட்டார். உடல் நலங் குன்றியதால் மட்டக்களப்பு மருத்துவமனையில் சில நாள்கள் தங்கவேண்டியிருந்தது. இருந்தும் மனந்தளராமல், ''பக்கத்திலிருக்கிறேன் பதறாதே — உன்னை, இரட்சிக்க வந்தவர் நான் விடுவேனோ — மகனே'' என்ற பாடலுக்கேற்க — மனஉறுதியோடு ஓரளவு உடல் நலம் தேறியதும், புறப்பட்டார் யாழ்ப்பாணத்திற்கு.

''திகையாதே கலங்காதே நீ போகுமிடமெல்லாம் உன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அன்னை பூமியைக்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

என்ன செய்துவிடும் என்று கேட்கிறீர்களா? அது விளை நிலங்களைப் பாழ் நிலங்களாக்கும். எங்கும் வறட்சி ஏற்படும்; கடல் உயரும். நூற்றைம்பதுவருடத்திற்குள் மகா சமுத்திரங்கள் ஏழு மீற்றர் வரை உயரும்! பல நிலப்பகுதிகள் காணாமற் போய்விடும்; முன்னூறு சிறு தீவுகள் கடலுக்கு அடியில் போய்விடும். மாலைதீவுகளும் கடலுக்கு அடியில் போய்விடும் என்று விஞ்ஞானிகள் சொல்வதும் இதனால் தான்.

எனவே நாம் இப்போதே விழிப்புணர்வடைந்து காடுகளை அழிப்பதை நிறுத்த வேண்டும். மரநடுகைத் திட்டத்தைப் பெருமளவில் முன் கூட்டியே நடைமுறைப் படுத்தவேண்டும்.

## சூடா நாட்டில்

சூடாகிக் கொண்டிருக்கும் எமது பூமித்தாயைநாம்குளிர்விக்கவேண்டும்; நாம் என்றும் வாழக்கூடிய இடமாக மாற்ற வேண்டும். முதலில் நாம் எமது சூடாநாட்டைப் பற்றிச் சிந்திப்போம். சூடாகிக் கொண்டிருக்கும் சூடா நாட்டைக் குளிர்விக்க நாம் என்ன செய்யவேண்டும்?

இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள் இதுவரையில் எத்தனை மரங்களை நட்டு வளர்த்து பராமரித்துள்ளீர்கள்? இதுவரையில் இல்லை என்றால் இனிமேலாவது ஒவ்வொருவரும் நல்ல பயன்தரும் மரங்களையும் வெட்டும்மரம் (Timber) நிழல் மரம் போன்றவற்றையும் நட்டு வளர்க்கவேண்டும். அனைவரும் செய்யக், கூடிய காரியங்கள் கீழே வகுக்கப்பட்டுள்ளன.

அ. காடுகள் அழித்தலைத் தவிர்க்க வேண்டும்.

ஆ. நமது சுற்றாடலில் நல்ல பயன்தரு மரங்களையும் நிழல்தரு மரங்களையும் நடுவதோடல்லாமல் கூடுகட்டி நீர்வார்த்துப் பேணி வளர்க்கவேண்டும்.

இ. மாணவர்களை ஊக்குவித்து நல்ல மரக் கன்றுகளை நடச் செய்யலாம்.

ஈ) வேம்பு, மலைவேம்பு, மா, இலுப்பை, கஜூ, சவுக்கு, புளி, வாகை, எலுமிச்சை, தோடை, கொய்யா போன்ற நாற்றுக்களை உண்டாக்கி மற்றவர்களுக்கு அளிக்கலாம்,

உ) நமது மூதாதையர் வைத்து இன்று பெருவிருட்சங்களாக நிற்கும் மா, மலைவேம்பு, வேம்புபோன்ற மரங்களைத் தகுந்த காரணமின்றி வெட்டி வீழ்த்தி விடக்கூடாது.

ஊ) எந்தவொரு ஞாபகத்திற்கும் பிறந்தநாள், திருமணநாள் போன்றவற்றிற்கும் நாம் மரங்களை நடலாம்.

எ) எந்தவொரு நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்கு முன்னரும் — கூட்டங்கள், கலந்துரையாடல்கள், மாநாடுகள் — மரங்களை நட்டு விட்டே தொடங்கவேண்டும்.

ஏ) வருடா வருடம் மரநாட்டு விழாக்களைநடத்தலாம். இதனால் இளைஞர்களிடம் சுற்றாடல் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

ஐ) நல்ல இன மரக்கன்றுகளைப் பரிசளிக்கலாம்.

## உங்கள் சிந்தனைக்கு

★ எமது வாழ்வு மரங்களோடு பின்னிப் பிணைந்தது. அவற்றின் நிழலிலே தான் எம் வாழ்வு.

★ கோவில்களைச் சுற்றி ஸ்தல விருட்சங்கள் நிற்கின்றன. இடங்களைக்கூட மரங்களின் பெயரால் குறிப்பிடுகின்றோம்.

★ ஆலடிப்பிள்ளையார், அரசடி அம்மன், இலுப்பையடிச் சந்தி, புறாப் பொறுக்கி ஆலடி, மாவடி, மருதடி, வேம்படி இப்படிப் பல பெயர்கள் வழக்கில் உள்ளன.

★ ஒரு மரத்தை வெட்டினால் ஒன்பது மரங்களை நடுங்கள்.

★ விறகுக்காக வெட்டும் மரங்களுக்குப் பதிலாக வேறு மரங்களை நடாவிட்டால் எதிர்காலத்தில் விறகுக்காக அதிக தூரம் செல்ல வேண்டி வரும்.

★ மரங்கள் பேசக்கூடியனவாக இருந்தால் அவை எம்மிடம் இவ்வாறு கேட்கும் என்பதனை நினைவில் கொள்ளுங்கள்.

நாம் உங்களுக்கு உங்கள் குழந்தைகளுக்கு உணவு, உடை உறையுள் ஆகிய பல நன்மைகளை அளிக்கின்றோம். ஆனால் நீங்கள் எமது குழந்தைகளாகிய நாற்றுக்களை – வளரப்பாடுபடும் கன்றுகளை வாழ விடுகிறீர்களா? வளர விடுகிறீர்களா? ஆடுகளை அவிழ்த்து விட்டு எம்மை அழிக்கிறீர்கள்; வாடி நின்றாலும் நீர் ஊற்ற மாட்டீர்கள். ஆனால் நாம் தப்பி ஒட்டி வளர்ந்தாலும் உங்களுக்கு நன்மையையே செய்வோம்.

★

# சூரியகாந்தி
## உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# அன்புநிறை அம்மாவே...

(மூன்றாம் பக்கத் தொடர்)

இருக்கிறது?

ஆராய்ந்து கொண்டே போனால் காடுகளில் மனிதன் திரிந்த காலத்தில் தமிழச்சியும் இருந்திருந்தால் இலை, குழை தானே அணிந்திருப்பாள். இன்று சேலைக்கு நாம் போடும் பிளவுஸ் கூட அந்நியர் வருகையோடு வந்ததுதானே. அதுக்கு முதல் பிளவுஸ் இல்லாமல், முன் வீட்டு சின்னம்மா ஆச்சி இப்பவும் கட்டுற மாதிரித்தான் தமிழ்ப் பெண்கள் சேலை கட்டினர். ஒரு நாட்டின் தட்ப வெப்பநிலை, கிடைக்கும் மூலப் பொருள் இதெல்லாம் தானே உடையைத் தீர்மானிக்கின்றன.

## வக்கிர உணர்வு வேண்டாம்

உடலை மறைத்து உடையணியச் சொன்னால் அது சரிதான் அம்மா. அப்படிப் பார்த்தால் பஞ்சாபி என்ன பாவம் செய்தது? மலிவான விலையிலும் பஞ்சாபி விற்குது. ஆனால் எளிமையை நாங்கள் விரும்ப வேணுமே. அது தான் பிரச்சினை. விலை மட்டும் தான் பிரச்சினை என்றால் சீலையில் மலிவானதும் உண்டு தான். அதுக்கு பிளவுஸ் எடுக்க எடுக்க, நிறம் மாறும்; விடுபடும்; விலையுங் கூட. தையற்கூலியும் அதுக்கு மேல். ஒரு சீலைக்கு நாலு தரம் பிளவுஸ் எடுக்க வேண்டிவரும். அந்தச் சீலையைக்கூட எவ்வளவோ அசிங்கமாய் கவர்ச்சியாய்க் கட்ட முடியுமே! என் வயதுப் பெண்கள் மிக நீளமான பாவாடை [ஸ்கேட்] சட்டைகளையே பெரும்பாலும் விரும்பி அணிகிறார்கள்.

அவசரத்துக்கு சைக்கிள்களில் நின்றபடி கதைப்பதும், பக்கம் பக்கமாகப் போவதும் வீதிப்போக்குவரத்துக்கு இடைஞ்சல் என்றால் பிழை தான். ஆனால் யாரோ தப்பாகப் பேசுகிறார்கள் என்பதற்காக எதையும் தவிர்க்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படிக் கதைப்பவர்கள் முதலில் தங்கள் பார்வையைச் செப்பனிட்டுக் கொள்ளட்டும்.

பஞ்சாபியுடன் ஒரு கா[illegible]ஊன்றியபடி சைக்கிளில் நிற்கும் பெண் அ[illegible]களால் தூற்றப்படுகிறாள் என்றால் அதி[illegible] தெரிவது அவர்கள் மனவக்கிரமே. கண்[illegible] கண்ட சினிமாப்படங்களை வீடுகளில் [illegible]ட்டு அதில் பெண்களை அங்கம் அங்க[illegible]க் காட்டும் போது அதனை எதிர்க்கவே[illegible] நிறுத்தவோ வக்கில்லாமல் வக்கிர உணர்[illegible]ளர்த்துக் கொள்ளும் நாம் 'பண்பாடு' [illegible]றிப் பேசி என்ன சாதிக்கப் போகிறோம்?

கடிதம் நீண்டு கொண்டே போவதால் கடைசியாக ஒன்றம்மா. எனது அண்ணன்மார் உழைத்த பணமும், உங்கள் ஒத்துழைப்புமே இதுவரை என்னைப் படிக்க வைத்து உருவாக்கியுள்ளன. நீங்கள் எனக்குச் செய்த பெரும் உதவியாக இதை நான் கருதுகிறேன்.

என்னைக் கண்கலங்காமல் பார்க்கும்படி எழுதியிருந்த அண்ணன்மாரின் அன்பில் நனைகிறேன். மிகவும் கெட்டித்தனமான எனது அண்ணன்மார் அத்திறமைகளையெல்லாம் வெளிப்படுத்தி வாழ முடியாமல், உயர்தர பரீட்சை கூட எடுக்க முடியாமல் வெளிநாட்டுக்குப் போக காலச் சூழ்நிலையாலும் குடும்பச் சூழ்நிலையாலும் நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள். இங்கு பல்கலைக்கழகத்தில் படிக்கும் ஆண்களைப் பார்க்கும் பொழுது அவர்களது சாதனைகளைக் காணும் பொழுது என் மனம் ஒரு கணம் அண்ணன்மாரின் அவல நிலையை எண்ணி இரத்தக் கண்ணீர் வடிக்கும்.

அந்த நாடுகளில் மிகவும் கஷ்டமான, கேவலமான வேலைகளைப் பணத்துக்காகச் செய்ய அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வெளிநாட்டில் என்று நீ பெருமைப்படுவதைப் பார்த்து நான் கவலை கொள்கிறேன். இனிமேலும் அண்ணன்மாரை என் பெயரால் கஷ்டப்படுத்த வேண்டாம். அவர்களை அடிக்கடி பணத்துக்காக நெருக்குவதும், அப்பணத்தை வீணாகச் செலவழிப்பதும் மகாபாவம்.

எனக்கு வேலை கிடைத்ததும் என் கால்களில் நான் நிற்பேன். அந்த நினைவே எனக்கு எவ்வளவு சந்தோஷத்தைத் தருகிறது. உனக்கு, அப்பாவுக்கு, தம்பிக்கு, எனக்கு என் உழைப்பில் விருப்பமானவற்றைச் செய்வேன். இது எவ்வளவு நிறைவு தரும் விஷயம் தெரியுமா!

படிக்க, வேலை பார்க்க வெளியுலக அனுபவங்களை உள்வாங்கி வளர சுயகௌரவத்துடன் வாழ என எங்களுக்கு (இன்றைய தலைமுறைப் பெண்களுக்கு) கிடைத்திருப்பன நல்ல வாய்ப்புகள். இவற்றைப் பயன்படுத்தி நாட்டுக்கும் வீட்டுக்கும் நாங்கள் நல்லது செய்ய, நாங்களும் வாழ்வில் முழுமை பெற, தன்னம்பிக்கை ஊட்டி எங்களை வழிப்படுத்துங்கள். வழமையான பார்வையிலிருந்து சற்று விலகி எங்கள் பக்கமும் நின்று கொஞ்சம் சிந்தித்துப் பாருங்களேன். 'பிளீஸ்' அம்மா!

அம்மா, உன்னைப் பற்றிக்கூட கவலையோடு தான் நான் சிந்திக்கிறேன். உன் அதிகரித்த வேலைச் சுமையும் வெளியுலகப் பகிர்வின்மையும் உன்னைப் பற்றி யோசிக்க ஒருவரும் இல்லை என்ற ஏக்கமும் எதற்கும் முணுமுணுத்துக் குறை சொல்லும் தன்மையை உன்னிடம் ஏற்படுத்தியிருக்கலாம். உன்னை நீ உணர உனக்குத்தான் வாய்ப்புகளே இருக்கவில்லையே.

நீங்கள், அப்பா, தம்பி என்றென்றும் நலத்தோடிருக்கவும் அண்ணன்மார் மன நலத்தோடும் உடல் நலத்தோடும் மகிழ்வாயிருக்கவும் [illegible] படி!

– உங்கள் அன்பு மகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 20 — 10 — 1926

உதிர்வு 19 — 06 — 1998

திருமதி

**நாகலிங்கம் அன்னம்மா**

என்றென்றும் எங்கள் இதயங்களை விட்டு அகலாத உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்!
மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

சிவகுருலேன்,
கொக்குவில் மேற்கு.

(57642)

# வல்லைக்கு தொலைபேசி வழங்கப்படவில்லை

வடமராட்சி, ஜூலை 19

வடமராட்சிப் பிரதேசத்தில் புலோலி மற்றும் உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளுக்கு இன்னமும் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவில்லை.

'கேபிள்லைன்' தொலைபேசி 'மோட்டோ றோலா வயர்லஸ்' தொலைபேசி ஆகியவற்றை டெலிகொம் நிறுவனம் வடமராட்சிப் பிரதேசத்தில் ஏற்படுத்தியுள்ளது. இப்பிரதேசத்திலுள்ள பருத்தித்துறை, நெல்லியடி, கரவெட்டி ஆகிய பகுதிகளில் 25-க்கு மேற்பட்ட கேபிள் லைன் தொலைபேசி இணைப்புகளும் பத்துக்கு மேற்பட்ட ''மோட்டோ றோலா வயர்லஸ்' தொலைபேசி இணைப்புகளையும் டெலிகொம் நிறுவனம் வழங்கியுள்ளது.

'கேபிள் லைன்' தொலைபேசி இணைப்புக்கான பரிவர்த்தனைநிலையம்புலோலியிலுள்ள மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வளவில் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் மந்திகை உட்பட புலோலி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளுக்கு தொலைபேசி இணைப்புக்கள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.

இதே நேரம் —

நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில் ஒரு சில வர்த்தகர்களுக்கு 'கேபிள்' தொலைபேசி இணைப்பும், 'மோட்டோ றோலா' வயர்லஸ் தொலைபேசி இணைப்பும் ஒரே சமயத்தில் வழங்கப்பட்டுள்ளன.

புலோலியிலுள்ளவர்த்தகர்கள் சிலருக்கு தொலைபேசி இணைப்புக்கான பாதுகாப்பு அனுமதி கிடைத்துள்ள போதிலும் இன்னமும் தொலைபேசி இணைப்பு எதுவும் வழங்கப்படாததது குறித்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ-173]

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



★ ★

19 07. 1998

### டனக்சாந்த் தவஞானம்

பளையைச் சேர்ந்த தவஞானம் சுகந்தி தம்பதியினரின் செல்வப் புதல்வன் டனக்சாந்த் தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் இன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்,

இவரை அன்பு அப்பா, அம்மா, பேரன்மார், பேர்த்திமார், சுவிஸில் இருக்கும் பெரியம்மா, பெரியப்பா, சிவானா அக்கா, ஜேர்மனியில் இருக்கும் ஜெயந்தன் மாமா, ஜெயபாலன் மாமா, கரவெட்டியில் உள்ள பெத்தாச்சி, பளையில் இருக்கும் குட்டி மாமா, சுமிதாஅன்ரி, ஜெயந்தினிஅன்ரி மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் டனக்சாந்த் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(சி/4268)

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை

### 1998 ஆடி மாத விசேட உற்சவங்கள்

**21 - 07 - 98 செவ்வாய்:-**

ஆடி முதலாம் செவ்வாய் விழா

காலை 6-00 மணி ஸ்நபனம், பூசை
முற்பகல் 10-00 மணி- ஸ்நபனம், பூசை, திருவிழா
மாலை 3-00 மணி - திருவிழா

**23 - 07 - 98 வியாழன்:-**

ஆடி அமாவாசை
கீரிமலையில் விசேட நிகழ்வு

**27 - 07 - 98 திங்கள்:-**

ஆடிப் பூரம் உற்சவம்

28 - 07 - 98, 04 - 08 - 98, 11 - 08 - 98 ஆகிய செவ்வாய் நாள்களிலும் ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் ஆடிச் செவ்வாய் நிகழ்வுகள்,

31 - 07 - 98 வெள்ளி;- ஆடிச் சோதி விழா, வெள்ளானைச் சுருக்கம் படித்தல், விசேட பூசை, திருவிழா.

07 - 08 - 98 வெள்ளி:- பிற்பகல் 1-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை

அபிஷேகம், பூசை, வரலட்சுமி பூசை, சுமங்கலி பூசை, திருவிழா, நூல் வழங்கல்.

நிர்வாகசபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(சி-4312)

# வடலிக்கூத்தர் நாடகம்

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் வடலிக் கூத்தர் நாடகம்மீண்டும்ஐரோப்பிய நாடுகளில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக்கலாமன்றத்தின் நாடகக் கலைஞர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி பிரான்ஸ் செல்லவுள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்த கொழும்பில்உள்ளஇலங்கைக்கான பிரான்ஸ் நாட்டு தூதர் யாழ். திருமறைக் கலாமன்றத்திற்கு விஜயம் செய்து கலாமன்றத்தின் நாடக கலைஞர்களை சந்தித்து உரையாடினார். அதனையடுத்தே நாடகக் கலைஞர்கள் பிரான்ஸில் 'வடலிக் கூத்தர்' நாடகத்தை மேடையேற்றவுள்ளனர்.

(ஐ-17)

# சிறுவர் வளர்ச்சி விழிப்புக்குழு

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்புத்துறை கிழக்கு (ஜே. 62) கிராமசேவகர் ரி.தேவராசா தலைமையில் ''சிறுவர் வளர்ச்சி விழிப்புக்குழு'' அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறும்.

(ஐ-30)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம் நாவலர் பாலர் சோலையின் 7 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டப மைதானத்தில் பாடசாலைப் பொறுப்பாசிரியை செல்வி பாலசுப்பிரமணியம் ஜெயந்தினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் வே. ஞானகாந்தனும், சிறப்பு விருந்தினராக சைவ பரிபாலன சபைச் செயலாளர் அ. சேனாதிராஜாவும், கௌரவ விருந்தினராக பாலர் கல்விக் கழகத் தலைவர் இ. தபகோபாலும் கலந்து கொள்வார்கள்.

(ஐ-8-30)

# நூலக அபிவிருத்திக்கு நிதி உதவி

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி நூலக அபிவிருத்திக்கென வடமராட்சி லயன்ஸ் கழகம் 20 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அதிபர் வி. அம்பலவாணரிடம் நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து புதிய நூல்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை நூலகப் பொறுப்பாசிரியர் எஸ். சிவநேசன் மேற்கொண்டுள்ளார்.

(ஐ-173)

# சாரணருக்கு சின்னம் சூட்டுதல்

பளை வேம்போடுகேணி சி. சி. த. க. பாடசாலை சாரணர்களுக்கான சின்னம் சூட்டு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் இ. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட சாரண உதவி ஆணையாளர் அ. பொ. செல்லையா இப்பாடசாலையைச் சேர்ந்த 35 சாரணர்களுக்கு சின்னங் [illegible] வைபவத்தில் பளை கோட்டக் கல்வி அலுவலர் க. [illegible]யிலாயபிள்ளையும் கலந்து கொண்டார்.

(ஐ-117)

## போதிய ஆதாயம் இல்லை

# வாழைச் செய்கையை கைவிடும் விவசாயிகள்

உரும்பிராய், கோப்பாய், மருதனார்மடம், இணுவில் போன்ற இடங்களில் உள்ள பல வாழைத்தோட்டச் செய்கையாளர்கள் வாழைத்தோட்டச் செய்கைய கைவிட்டு வருகிறார்கள்.

வாழை மரங்களை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பாதுகாத்து வளர்த்தும் வாழைக்குலைகளை சந்தைப்படுத்தி போதிய ஆதாயம் பெற முடியாத நிலை இருப்பதாலேயே வாழைச் செய்கையை கைவிடத் தொடங்கி உள்ளனர்.

உள்ளூர்ச் சந்தைகளில் வாழைப்பழங்கள் கிலோ 15 ரூபாவிலிருந்து20 ரூபா வரை விற்பனையாகி வருகின்றது.

இதேவேளை —

சங்குவேலி, மானிப்பாய், சண்டிலிப்பாய், கந்தரோடை வயல்வெளிகளில் இம்முறை செய்கைபண்ணப்பட்ட வெள்ளரிப்பழச் செய்கை நல்ல விளைவைக் கண்டுள்ளது.

மருதனார்மடம் சந்தை மற்றும் வீதியோரங்களிலும் கூட மலிவான விலைகளில் வெள்ளரிப்பழத்தை மக்கள் வாங்கக் கூடியதாக உள்ளது.

(ஐ-152)

# 45ஆவது நினைவு நாளும் நன்றி நவிலலும்



## சின்னத்தம்பி நமசிவாயம்

(சமாதான நீதிவான், முன்னாள் செயலாளர் வணிகர் கழகம், உரிமையாளர்: சிவகுமார் ஸ்ரோர்ஸ்)

தாயின் மடியில் 10 — 03 — 1942

சிவனடியில் 05 — 06 — 1998

குடும்பத்தின் முதல்வனே! முன்னவனே! மூத்தோனே!
அருந்தவப் புதல்வனே! அன்புசால் மணாளனே!
பாசமிகு தந்தையே! பண்பான சகோதரனே!
மாண்புமிகு மைத்துனரே! அன்பான மாமாவே!
ஓயாது உதவிடும் நண்பனே! சமூகத்தின் காவலனே?
அன்பு பொழியும் உன்முகம் காண ஆலாய்ப் பறக்கிறோம்
ஆவலாய் இருக்கிறோம். விதியாடிய ஆட்டம்
இதுதானோ? உன்வழிதொடர்கிறோம் உன் எண்ணம்
ஈடேற உழைக்கிறோம்.

எங்கள் குடும்பத் தலைவனின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்திய அனைவருக்கும், அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் சகல உதவிகளும் புரிந்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று 19 — 07 — 1998 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆ[illegible] சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போச[illegible]த்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கி[illegible]றோம்.

தாய்,
மனைவி, மக்கள்,
ச[illegible]ரன், சகோதரிகள்,
[illegible]துனர்கள் மைத்துனி.

''சிவசக்திவாசம்''
20/11, வைரவர் கோயில் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(57665)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தேவை

மிருதங்கத் தொழில் செய்வதற்கு இளைஞர் ஒருவர் தேவை. மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கோ. விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலடி). [57599]

கடையில் வேலை செய்து அனுபவமுள்ள படித்த பெண் பிள்ளைகள் தேவை, நேரில் வரவும். தொடர்பு: 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [57678]

## இறைச்சிக்கோழி

புறொயிலர், கல்பேட் நியாயவிலையில் விற்பனைக்குண்டு. அரைக்கோழியும் பெறலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். 54/2, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். [57658]

இறைச்சிக் கோழி புறொயிலர் (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சின்னக்கடைக்கு அருகில்) [57600]

இறைச்சிக் கோழி (Broilers) தினமும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [57675]

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். A. M. T. ஸ்ரோர்ஸ், தபாற் கட்டைச்சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம். [57673]

## O/L கணிதம் 98

அண்டசராசர முறையில் ஆரம்ப அறிவினை 2 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். தொடர்ந்து அம் முறையினைப் பயன்படுத்தி 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distin-tion பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு, ஒழுங்கை, சுண்டுக்குளி. [57585]

## விற்பனைக்கு

1½ வயது நிரம்பிய கறுப்பு, மண்ணிறமுடைய அலிசேசன் ஆண் நாய் (German Seped) விற்பனைக்குண்டு. இல. 48, மானிப்பாய் வீதி. (ஈழநாடு முன்பாக) யாழ்ப்பாணம். (57662)

G7, G300, L150, L15, J20, JVC போன்ற டெக் வகைகள் கார் றேடியோ (சொனி) ஓடியோ கசெற், கார் அலங்காரச் சாமான்கள், கார் வீல்கப் (சில்வர்) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- ச. செந்தூரன், இல4, மேதர் லேன், மானிப்பாய் [57628]

சொந்தப்பாவிப்பில் உள்ள ஜப்பான் குவாட்டா ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. தம்பித்துரை, 299, அரசடி வீதி, நல்லூர். (பார் அருகில்) யாழ்ப்பாணம். [57663]

## கலர் மீன்கள்

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய இன கலர் மீன்கள் விற்பனைக்கு உண்டு. A. அருளானந்தம், இல. 588/8, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் (ஸ்ரான்லிக் கல்லூரி முன் ஒழுங்கை) நண்பகல் 12 மணியில் இருந்து பார்வையிடலாம். [57691]

## தவறிவிட்டது

14-07-98 அன்று கல்வியங்காடு நாயன்மார்கட்டு ஊடாக அரியாலை செல்லும் வழியில் ஒரு சூட்கேஸ் பந்தல் அலங்கரிக்கும் பொருள்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். யசோ பந்தல் சேவை, ஜி. பி. எஸ் வீதி, கல்வியங்காடு யாழ்ப்பாணம். [57618]

வங்கி ஆவணங்களும், ஊழியர் சேமலாப ஆவணங்களும் உடைய கைப்பை ஒன்று சுன்னாகத்திற்கும், இணுவில் சுதுமலை வீதிக்கிடையில் பிரயாணத்தின் போது தவறிவிட்டது. இக் கைப்பையைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. புஸ்பநாதன், மதவடி ஒழுங்கை, சுதுமலைதெற்கு, மானிப்பாய். [57651]

## காணி விற்பனைக்கு

சென். பற்றிக்ஸ்றோட்டில் "பத்திமாதா வளவு" எனும் காணியில் அமைந்துள்ள இல. 55/1, முக்காற் பரப்பு வீடு கட்ட வசதியான வெறும் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பி. தருமநாயகம், 43/11, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். [57660]

## FOR SALE

2 Brand new steel office Cabinats and Yamaha porta ble Organ with 46 Keys for Immediate Sale Inspection on any day C/o No. 91, Brown Road, Jffna. (57643)

## WANTED

Physical Science Graduates to teach Pure Mathematics, Applied Mathematics and Chemistry.

Science Trained to teach General Science In the middle and upper School.

Retired Teachers can also apply.

Application should be forwarded to reach the Principal before the 31st of July 1998.

Principal,
**Chundikuli Girls' College,**
**Jaffna.**

( C/4316 )

# நன்றி நவிலலும் சபிண்டீகரணமும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 04 |
| 12 | 07 |
| 1941 | 1998 |

புனிதமான எங்கள் குடும்பத் தலைவரும், அன்புத் தெய்வமுமாகிய

**சிவஸ்ரீ கனகரத்தினம் ஐயா**
**பாலசுப்பிரமணிய ஐயா**
(பிரபல முத்துச்சப்பற அமைப்பாளர்)

அவர்கள் பரிபூரணத்தின் பாத மலரில் பூரணத்துவமாகிய சமயத்திலே ஓடோடி வந்து உதவிகள் செய்தவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், சிவக்கிரியையில் கலந்து கொண்டு திறம்பட நடத்தி வைத்த சிவாச்சாரியர்களுக்கும் மற்றும் சக ஆசிரியர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும், இரங்கல் உரை நிகழ்த்திய பெரியோர்களுக்கும், உற்றார், உறவினர்கள், அயலவர்களுக்கும் எங்கள் உளங் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பாஷான உத்வாசனத்திலும் சபிண்டீகரன மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

திருமதி
இரத்தினாம்பிகை பாலசுப்பிரமணியம் ஐயா
பா. சோமசுந்தர ஐயா
இடைக்காடு அம்மன் கோயில்
பா. மனோகரன் ஐயா
புதிய உயர் கல்லூரி
(98 யாழ். பல்கலைக்கழகம்)

தீர்த்தாங்குளப்பிள்ளையார் கோவிலடி,
பத்தமேனி,
அச்சுவேலி.

(சி/4311)

# 16-ம் நாள் நினைவஞ்சலி

அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபையின் ஆரம்பகால மகாசபை உறுப்பினர்

அமரர்

**க. பாலசுப்பிரமணிய ஐயா**
(பிரபல முத்துச்சப்பற அமைப்பாளர்)

அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை சைவக்
குருமார் அர்ச்சகர் சபை

தலைமைச் செயலகம்,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

C/4310

# நினைவஞ்சலி

**26 ஆம் ஆண்டு** | **முதலாம் ஆண்டு**





**சிதம்பரப்பிள்ளை தம்பிராசா**
(இளைப்பாறிய அதிபர்)
பிறப்பு 16-08-1911 இறப்பு 31-07-1972

**தம்பிராசா பொன்னம்மா**
(இளைப்பாறிய ஆசிரியை)
பிறப்பு 19-09-1914 இறப்பு 29-07-1997

திதி: 19 - 07 - 1998

"விரைந்தீர் இருவீரும் விண்ணுலகை நோக்கி
வரைந்தீர் கோல மொன்று வையகத்தில் சாட்சிக்கு
கரைந்தே நாள்கள் பல காணாமற் போனாலும்
நினைந்தே வாழ்ந்திடுவோம் நீக்கமற எந்நாளும்"

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

"புனித வாசம்"
மீசாலை கிழக்கு மீசாலை.

(57668)

# நீங்கா நினைவில் ஓராண்டு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19 | 30 |
| 11 | 07 |
| 1961 | 1997 |

**செல்வி மைதிலி கந்தசாமி**

திதி: 19-07-1998

பாசமுள்ள மகளே! சகோதரியே!
பாதியிலே எமைவிட்டுப் பறந்ததேனோ!
ஓராண்டு சென்றாலும்
ஓயாது உன் நினைவுகள்.

உன்பிரிவால் துயருறும்:
அம்மா, சகோதர, சகோதரிகள்.

மாவத்தை,
அளவெட்டி வடக்கு.

(57659)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணமும்

மறைவு
04
—
07
—
1998

(சி/4311)

ஞ்சலி

ஐயா

4310

உதிர்வு
30
—
07
—
1997

சாமி

(57659)

# உதயன்

## தெரியாத முடிவு

தென்னிலங்கையில் இப்போது சர்ச்சைக்குரிய அரசியல்விவகாரமாக உருவாகியிருப்பது மாகாண சபைத்தேர்தல்.

தேர்தல் ஆணையாளர், சட்ட விதிகளுக்கு இணங்க, ஐந்து மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடைபெறுவதற்கான திகதியையும் நிர்ணயித்து விட்டார். ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் என்பது உத்தியோகபூர்வ அறிவிப்பு.

இத்தேர்தலுக்குத் தேவையான வாக்காளர் அட்டைகளை பல கோடி ரூபா செலவில் சுவீடனில் அச்சிடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டன. இன்னும் சில தினங்களில் தபால் மூலம் வாக்களித்தல் ஆரம்பமாக வேண்டும்.

இத்தனை ஆயத்தங்களுக்கும் அறிவிப்புகளுக்கும் மத்தியில், மாகாண சபைத் தேர்தலை அடுத்த நவம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கும் சிந்தனையிலேயே அரசு உள்ளது. இது சம்பந்தமாக கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்ந்து தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

அன்றையதினம் அமைச்சரவை கூடவே செய்தது. எனினும் முடிவு என்னவென்று உடனடியாக வெளியிடப்படவில்லை. அமைச்சரவைக்குப் பின்னர் நடத்தப்படும் பத்திரிகையாளர் மாநாடும் அடுத்த நாள் கூட்டப்படவில்லை. அதனால் உத்தியோகபூர்வ தீர்மானம் நேற்றுவரை வெளியாகவில்லை; அது தெரியாத முடிவாக இருக்கிறது.

நாடெங்கும் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்குச் சாதகமாகவே அமைச்சரவை புதன்கிழமை முடிவு செய்ததாக நம்பிக்கையான தரப்புகளில் இருந்து தெரியவருகிறது. அநேகமாக சார்க் மாநாட்டு பாதுகாப்பையும் மனதிற் கொண்டு, இந்த வாரமே அவசரகாலச் சட்டம் ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

இதனை அறிந்து தான் போலும் ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே. வி. பி ஆகிய கட்சிகள் மக்கள் போராட்டத்தை நடத்துவதற்குத் தாம் ஆயத்தமாகி வருவதாகத் தெரிவித்துள்ளன. மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் அரசின் எந்த முயற்சியையும், நடவடிக்கையையும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பதெனவும் அவை முடிவு செய்திருக்கின்றன.

ஜுலை, ஓகஸ்ட் மாதங்களில் எப்போதும் இலங்கை குழம்பிப் போவது வழக்கம். சண்டை சச்சரவுகள் மூளும். ஏற்கனவே மூண்ட சண்டை உச்ச நிலை அடையும், இரத்த ஆறு ஓடும் காலம் அது. தேர்தல் ஒத்திவைப்பும், எதிர்க்கட்சிகளின் உத்தேச மக்கள் போராட்டமும் தெற்கில் அராஜகத்தையும், பெரும் மோதல்களையும் உருவாக்கும் சாத்தியம் நிறையவும் உண்டு.

யுத்தம் மற்றும் அதன் விளைவுகளால்

# வடபிராந்திய மின்சார சபையின் 75 வீதமான சொத்துக்கள் அழிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 19

37 வருடங்களாக படிப்படியாக அபிவிருத்தி செய்யப்பட்ட வடபகுதி மின்சார சபையின் திட்டங்கள் மற்றும் சொத்துக்களில் 75 வீதமானவை யுத்தம் மற்றும் பிற காரணங்களினால் அழிக்கப்பட்டு விட்டன.

இலங்கை மின்சாரசபையின் வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் வெ. இராசேந்திரம் இவ்வாறு தெரிவித்தார்.

குண்டுவீச்சு, ஷெல்வீச்சு காரணமாக மின் நிலையங்கள், கம்பிகள் மற்றும் மின் உபகரணங்கள் அழிந்தன. பல சந்தர்ப்பங்களில் பொது மக்களாலும் இவை அழிக்கப்பட்டுள்ளன.

மின்சாரத் தூண்கள் உடைக்கப்பட்டு கம்பிகள் களவாடப்பட்டன. மின் கம்பிகள் களவாடப்பட்டு வேலிகளுக்கும், கூடைகள் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டன. மின் மாற்றிகள் உடைக்கப்பட்டு எண்ணெய் திருடப்பட்டதுடன் அதற்குள் இருந்த செப்புக்கம்பிகளும் செப்புச்சுருள்களும் களவாடப்பட்டன. மின் மரங்கள் வீதிகளிலிருந்து கிண்டி எடுத்துச் செல்லப்பட்டு விறகுக்காகவும் வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டன. இதனால் மின்சாரசபையின் 75 வீதமான சொத்துக்கள் அழிந்துவிட்டன.

1990 ஆம் ஆண்டில் யாழ். குடாவில் குறைந்த மின் அழுத்த மின்மார்க்கம் 1,700 கி. மீற்றரும் அதி உயர் மின் அழுத்த மின் மார்க்கம் 460 கிலோ மீற்றரும் இருந்தன.

தற்பொழுது 1996 ஜுலை தொடக்கம் 1998 ஜுலை வரையான இரு வருடங்களில் குறைந்த மின் அழுத்த மின் மார்க்கம் 576 கிலோ மீற்றரும் அதி உயர் மின் அழுத்த மின் மார்க்கம் 33 கிலோ மீற்றரும் மீள அமைக்கப்பட்டுள்ளன.

மின் மார்க்கத்தை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு பத்து வருடமாவது செல்லும். இருந்த போதும் 1999 இறுதிக்குள் இதனைச் செயற்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

மின்சார சபையிலுள்ள ஆட்பற்றாக்குறை, வாகன வசதிகளின்மை, உபகரணங்களில்லாமை போன்ற பல காரணங்களால் துரிதமாக செயற்பட முடியாமலுள்ளது.

மின் பொறியியலாளர்களும், மின் அதிகாரிகளும் புதிதாக நியமனம் செய்யப்படுவதுடன் பலவாகனங்களும் தேவை.

'கூல் எயார்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொண்டு வரப்பட்ட ஆறு ஜெனரேட்டர்கள் பொருத்தப்பட்டு விட்டன. இரண்டு ஜெனரேட்டர்களைப் பொருத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த ஜெனரேட்டர்களை இயக்கும் போது ஏற்படும் சத்தத்தைக் கட்டுப் படுத்துவதற்கான அதி உயர் ஒலித் தடுப்பு கருவி கொழும்பிலிருந்து கொண்டுவரப்படவுள்ளது.

17 ஆயிரம் பேருக்கு தற்பொழுது மின்சாரம் வழங்கப்படுகிறது. எமது அறிவுறுத்தலின் படி மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் தற்போது இருக்கும் நிலையில் மேலும் ஆயிரம் பேருக்கு மின் விநியோகம் செய்ய முடியும்.

நாங்கள் 3 பல்புகளை மட்டும் தான் பாவியுங்கள் என்று கூறினால் எவரும் அதைப் பொருட்படுத்தாமல் மேலதிக பல்புகளுக்கும் தொலைக்காட்சி, மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம் போன்றவற்றுக்கும் மேலதிகமாக மின் சாரத்தைப் பாவிக்கிறார்கள். இதனால்தான் அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது. எனவே மக்கள் எம்முடன் ஒத்துழைத்தால் சீரான மின் விநியோகம் நடத்தப்படும்.

பல இடங்களில் இப்பொழுதும் 'கள்ளக் கரண்ட்' எடுக்கிறார்கள். இவர்களில் பெரிய மனிதர்களும், படித்தவர்களும் அடங்குகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும்.

இவர்கள் தங்களின் தவறுகளை மறைத்து வைத்துக் கொண்டு அதிகாரிகளையும், மின்சார ஊழியர்களையும் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

37 வருடகாலமாக படிப்படியாக வளர்ச்சியடைந்த வடபகுதி மின்சார சேவையை இரண்டு மூன்று வருடங்களில் அபிவிருத்தி செய்யவேண்டும் என எதிர்பார்க்கக்கூடாது, என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-5-6)

# உங்களது ஆன்மீக போஜனம் பிதாவுக்கு உகந்ததாக இருக்கட்டும்

''இயேசு அவர்களை நோக்கி நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரிகையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது'' யோவான் 4:34வசனம் 34.

இதனை வாசிக்கும் அன்பு நெஞ்சங்களே! இப்பூவுலக வாழ்வில் இயேசு பெருமான் வாழ்ந்த காலம் முப்பத்தி மூன்றரை வருடங்களே.

இக்காலப் பகுதிக்குள் அவரது கீழ்ப்படிவுள்ள வாழ்வு இரண்டு விதமாக அமைகின்றது.

1 தன்னை ஈன்ற பெற்றோருக்கு,

2 தன்னை அனுப்பிய பிதாவுக்கு- என்பனவே அவை.

அவர் பெற்றோர் சொல் தட்டவில்லை. பெற்றோர் மனம்புண்பட நடக்கவில்லை. தன் பிதாவின் சித்தத்தையும் அவர் மீறவில்லை.

இயேசுபிரான் தன் போஜனம் எது என்று கூறுகின்றார். அதாவது பிதாவின் செயற்பாடுகளை, சித்தத்தை (கிரிகையை) செய்து முடிப்பதே தமது போஜனம் என்கின்றார்.

இயேசுபிரான் பிதாவின் கிரிகையை தளம்பல் அற்ற நிலையில் செய்து முடித்தார் என்பதை நாம் அவர் சிலுவையில் மொழிந்த ஆறாவாக்கினூடாக அறிந்து கொள்ளலாம். ''முடிந்தது'' (Complished) என்பதே அதுவாகும். அங்கு சந்தோசத்துடன் கூடிய பெருமூச்சைக் காணலாம். அவரது ஆன்மீக போஜனம் இதுவே.

ஒரு சிறுபிள்ளைக்கு முத்தம் கொடுக்க வேண்டுமானால் சிறு பிள்ளையின் பால் குனிந்து முத்தம் கொடுக்க வேண்டும். அல்லது சிறுபிள்ளையைத் தூக்கவேண்டும். அதுபோன்று இயேசுபிரான் அரியணை விட்டு மக்களோடு சேர்ந்து தன்னை அடையாளப்படுத்தி, மக்களின் துயர் துடைப்பதே, அவர்கள் கண்ணீர் ஆற்றுவதே, தமது பணியென பாரபட்சமற்ற அன்புள்ளம் கொண்டவராய் இதுவன்றோ பிதாவின்சித்தம் என்பதை அறிந்தவராய் தன் போஜனமே இது தான் என்பதைக் கண்டு கொண்டவராய்பணியாற்றினார்.

இயேசு பிரான் தன் பணிக் காலங்களில் சீடர்களுக்கு பல வேளைகளில் கூறும் போது ''நீங்கள் அறியாத போஜனம் ஒன்று உண்டு,'' என்பதாகக் கூறுகிறார். இதனை யோவான் நற்செய்தியில் காணலாம். சீடர்கள் குழு இதனைப் புரிந்து கொள்ளவில்லை. காரணம் என்னவெனில் அவர்கள் வெற்றுவயிற்றையே நினைத்தார்கள். ஆனால் இயேசு ஆன்மீக உணவைக் குறித்தே பேசினார். இதுதான் பிதாவுக்கு உகந்த சித்தமும் இயேசுவின் போஜனமுமாக இருந்தது.

அன்புசால் நெஞ்சங்களே! என் உள்ளத்திலே சமாதானமில்லையே என்ற ஆன்மீக தாகமுள்ள அன்பர்களே!

கலங்க வேண்டாம். உங்கள் மனப்பாரங்களை இயேசுவின் மேல் வையுங்கள். அவரே அதைச் சுமந்து இளைப்பாறுதல் தருவார்.

எமது வாழ்க்கை எப்படி நகர்கின்றது? எமது போஜனம் வெற்றுவயிறை நிரப்புவதாக இருக்கின்றதா; ஆன்மீக உணவைத் தேடுகின்றோமா?

## ஞாயிறு நற்பிரசாதம்

பெற்றோரைப் பிள்ளைகள் மதிக்கின்றார்களா?

பெற்றோரே, உங்கள் பிள்ளைகளை நீங்கள் மதிக்கின்றீர்களா?

எல்லாவற்றுக்கும் மேலாக அகிலத்தைப் படைத்த இயேசுபிரான் உன் அகத்தில் இருக்கின்றாரா? ஆன்மீக தாகம் உள்ள ஏழைஎளியவர்கள்பால் எமது அன்பு பாய்கின்றதா?

இவற்றுக்கு உன் ஆன்மீகத்திலே இருந்து சரியான பதில் வருமேயானால் இயேசுபிரான் சிலுவையில் மொழிந்த இரண்டாம் வார்த்தையாகிய கள்வனுக்கு கூறிய வாக்கே உங்களுக்கும் கிடைக்கும்.

''நீ இன்றைக்கு என்னோடு கூட பரதீசிலிருப்பாயாக'' (லூக்கா 23:43)

**அருள்திரு கு. ஐ. குமரேசன்**

## நாளை

ஆடி -04

திங்கட்கிழமை

திதி: துவாதசி முன்னிரவு: 11.41வரை.

நட்சத்திரம்: ரோகிணி; பிற்பகல்: 4.05 வரை.

சுபநேரம்: 12.01 - 01.31

ராகுகாலம்: 07.31-09.01

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

மனம் மாசு இல்லாமல் தூய்மையடைந்தால், துன்பமே இல்லாத பூரண ஆனந்தம் வாய்க்கும்.

- ஸ்ரீ ராமபிரான்

## இவரைத் தெரியுமா?



படத்தில் காணப்படுவர் இப்போது சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மார்பு நோய்ச் சிகிச்சைப் பிரிவில் தங்கியுள்ளார்.

இவர் ஒரு மன நோயாளி.

இவரைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடியவில்லை என்றும், உறவினர்களை வந்து அழைத்துச் செல்லுமாறும் சாவகச்சேரி ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். [அ]

## புதிய தேர் வெள்ளோட்டம்

தென்மராட்சி ஜுலை 19

பளை இத்தாவில் முருகமூர்த்தி ஆலயத்துக்கு மூன்று லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய இரதம் எதிர்வரும் புதன்கிழமை வெள்ளோட்டம் விடப்படவுள்ளது.

இந்த இரதம் புதன்கிழமை காலை பளை நகரப்பகுதியிலிருந்து ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு பின்னர் வெள்ளோட்டம் நடைபெறும். (ஐ-117)

## மலசலகூடம் அமைக்க நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஜுலை 19

பளை, வேம்பொடுகேணி சி. சி. த. க. பாடசாலையில் ஒரு லட்சம் ரூபா செலவில் இரண்டு மலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான நிதி பளைப் பிரதேச செயலகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் அ. செல்லையா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 - 05 - 1937 | 20 - 06 - 1998 |

கப்பூதுவைச் சேர்ந்த அருணாசலம் செல்லையா அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியை 20-07-98 திங்கள் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கப்பூது,
கரணவாய் தெற்கு.

[57682]

## அந்தியேட்டி வீட்டுக்கிரியை அழைப்பு



செல்வன்

### மயிலு இராமச்சந்திரன்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 25 - 04 - 1957 | 20 - 06 - 1998 |

20 – 06 – 98 அன்று அகால மரணமடைந்த இவரது இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு பல வகையிலும் உதவி புரிந்தவர்கள், மலர் வளையங்கள் வழங்கியவர்கள், ஆறுதல் கூறியவர்கள், அனுதாபச்செய்தி அனுப்பியவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (19 – 07–98) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும்!
தாய், சகோதரர்கள்.

கோகிலா தேநீர்ச்சாலை,
கொடிகாமம்.

(சி-4319)

## சமய...

(நான்காம் பக்கத் தொடர்)

கர்த்தராகிய கடவுள் உன்னோடு இருக்கிறார்'' என்ற திருவாக்கை உறுதியாக நம்பி—அதிகமாகச் சேதமடைந்து காடுபோலிருந்த ஆச்சிரமத்தை சீராக்கிச் செம்மையாகத் திருத்தி முன்னைய நிலைக்குக் கொண்டு வந்தார். மீண்டும் ஆச்சிரமப் பணிகள் மாண்புடன் நடைபெற்று வருகின்றன.

### சமய சமூகப் பணிகள்

அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த முன்னாள் தலைமைப் பேராயர், பேரருள்.மிகு உவில்லியம்டெம்பிற் அவர்கள் தமது அருளுரையொன்றில் கூறியது:

''இறைவன் தன் அன்பின் நிமிர்த்தம் மனுக்குலத்தின் ஐக்கியத்திற்குள் வந்தார் என்பதே மனித வாழ்வின் அடிப்படை உண்மை, இவ்வன்பிற்குப் பதிலளிக்கும் முகமாக அவருடன் ஐக்கியப்படுவதே நமது கடமை. இந்த ஒருமைப்பாட்டை இறைபணியும் மக்கள்சேவையும் இசைவாக இணைந்த வாழ்வினால் தான் நாம் அனுபவிக்கலாம் '' என்பதே.

இக்கூற்றிற்கு இசைய சமயப் பணியும் சமுதாயப் பணியும் ஒன்று சேர்ந்து செயற்படுவதே கிறிஸ்துவ இறை பணியின் முழுமை என்பதே ஆச்சிரம நிறுவுநர்களின் முக்கிய கொள்கையாகும், இந்தக் கொள்கையைச் சாம் அண்ணன் ஆச்சிரமத்தில் நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

கடந்த 25 ஆண்டுகளாக சமயப்பணிகளையும், சமூக நலப்பணியையும் ஒன்றாக இணைத்து இயக்குவதில் அண்ணன்சாம் அல்பிறட் அடிகளார் எடுத்து வரும் முயற்சிகள் நல்ல பலன்களை அளித்து வருகின்றன என்பது கண்கூடு,

இக்காலப் பகுதியில் ஆச்சிரமம் முன்னின்று ஆற்றி வந்த சமுதாய நலப் பணியில் கிறிஸ்தவர்கள் மட்டும் மன்றி பிறசமயப் பணியாளர்களிற் பலர் ஒன்று சேர்ந்து ஐக்கியமாக ஈடுபட்டது இங்கு குறிப்பிடத்தக்கது, போரின் விளைவினால் ஏற்பட்ட துன்பங்களை அனுபவித்துத் துயருற்றிருந்த மக்களுக்கு ஆச்சிரமம் செய்து வந்த துயர்துடைக்கும் பணிகள் பல. இதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்ற முதுமொழிக்கிணங்க இந்த ஒருமைப்பாட்டைக் கிறிஸ்துவ சபைகளுக்கிடையே ஆச்சிரமம் பல ஆண்டுகளாக வளர்த்து வருகிறது. இப்பணியைச் சாம் அண்ணன் தொடர்ந்து நடத்தி வருகின்றார்.

நாட்டிலுள்ள அனைத்து திருச்சபைகளும் இயேசுபிரானின் திருவுளச் சித்தத்திற்கிசையஒன்றுபட்டுஒரேதிருச் சபையாகத் திகழ வேண்டுமென்பதே அண்ணன் சாம் அடிகளாரின் தணியாத வாஞ்சையாகும். இந்த ஒருமைப்பாடு தமிழ் மக்கள் மத்தியிலும் நிலவவேண்டும் என்பதே அடிகளாரின் அன்றாட இறை வேண்டலாகும்.

ஆச்சிரமத்தில் நாள்தோறும் நடைபெறும் கீழைத்தேய வழிபாடும், கர்நாடக இசையில் இசைக்கப்படும் பாடல்களும், வாரமொருமுறை நடைபெறும் உபவாச செபங்களும், அன்பின் சேவைகளும், துயர்துடைக்கும் பணிகளும் நமது சமுதாயத்தை மாற்றியமைக்கும் என்பதில் ஐயமில்லை. இறைத்தொண்டின் இரு கரங்கள் அன்பும் இரக்கமும்; வாழ்த்தும் வணக்கமும்; புன் முறுவலும் இன் சொல்லும் — என்பதே இவ்வாச்சிரமத்தை நிறுவிய அம [illegible] அடிகளாரின் கொள்கை. இதனையே சாம் அண்ணன் கடைப்பிடித்து வருகிறார்.

★

## காரைநகர் சிவன் கோயில்

## மண்டலாபிஷேகம்

### 1998 - 07 - 21

சிவநேயர்களே,

ஈழத்துச் சிதம்பரமெனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோயிலில் மூலமூர்த்திகளுக்கும் ஐயனார் – சிவன் இராஜகோபுரங்களுக்கும் சென்ற வைகாசித் திங்கள் 24 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (07 - 06 - 1998) வெகு சிறப்பாக கும்பாபிஷேகம் நிறைவேறியதைத் தொடர்ந்து தினமும் அபிஷேகம் உற்சவம் நடைபெற்று கும்பாபிஷேகத்திற்கு பெருஞ்சாந்தியாக அமையும் மண்டலப் பூர்த்தி 1008 சங்காபிஷேக ஆராதனைகள் நிகழும்

**ஆடித்திங்கள் 5ஆம் திகதி (21-07-1998) செவ்வாய்க்கிழமை பகல் 10 மணியளவில்**

நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாலை 4–00 மணியளவில் பஞ்சமூர்த்திகள் திருவீதி உலாவும், திருஊஞ்சலும் இடம்பெறும். அவ்வமயம் சிவநேயர்கள் அனைவரும் பெரும் திரளாக வந்து சுவாமி தரிசனம் பெற்று இஷ்ட சித்திகள் பெற்று ஏகுமாறு வேண்டுகின்றோம்.

மண்டலாபிஷேக உபயம்:

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

| | |
|---|---|
| ஆ. அம்பலவிமுருகன் | வே. செல்வநாயகம் |
| மு. சுந்தரலிங்கம் | செயலாளர் |
| ஆதீன கர்த்தாக்கள் | காரைநகர் சிவன்கோயில் |
| காரைநகர் சிவன்கோயில். | திருப்பணிச்சபை. |

(57674)

## முதலாண்டு நீங்காத நினைவுகள்



திருமதி

### சிவலிங்கம் இராசகுமாரியம்மா

(இராசாத்தி அண்ணி)
(ஓய்வுபெற்ற நெசவு போதனாசிரியர்)

| அன்னை மடியில் | அம்மன் பாதத்தில் |
|---|---|
| 20 - 11 - 1946 | 14 - 07 - 1997 |

திதி: 04- 07- 1998 பூர்வபக்க தசமி சனிக்கிழமை

ஆண்டொன்று ஆனதுவே அன்னை முகங் கண்டு
மாண்டு போகுதுள்ளம் வேதனையால் துவண்டு
மீண்டு மீண்டு எழும் நினைவலையில் நிறைந்து
உள்ளம் சோர்ந்து போகுதம்மா என்றும்
வேண்டற்குரியவராய் விண்ணில் உறையும் தாயே!
வேண்டுகின்றோம் உங்களாத்மா வினை தீர்ப்பான்
அடிசேர.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கணவன், பிள்ளைகள்.

| சொந்த முகவரி:- | தற்காலிக முகவரி:- |
|---|---|
| செல்வராசா அவனியூ | 171, புன்னை நீராவியடி |
| ''ஜனனோதயம்'', | 12 ஆம் கட்டை, |
| அம்மன் வீதி, | விசுவமடு. |
| திருநெல்வேலி. | |

(57686)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட் விஸ்வப் பிரஹ்மணே நம!

## போற்றல் மிகு வாழ்த்துகள்!

## "கலாபூஷணம்"

எமது குருவும் மூத்த சகோதரனுமாகிய
சிற்பச்சக்கரவர்த்தி
ஸ்தபதி விஸ்வப் பிரஹ்மஸ்ரீ

## ஆறுமுகம் ஜீவரட்ணம்

ஆச்சாரியார்

(காளி கோயிலடி, திருநெல்வேலி.)

அவர்களை அகவை பல கண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

— சகோதரர்கள்

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(576 97)

## மாபெரும் காட்சி
## உதைபந்தாட்டப் போட்டியும்
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும்
## 30-07-1998

யாழ் பல்கலைக்கழக விளையாட்டவையின் ஊக்குவிப்பு நிதிக்காக யாழ். பல்கலைக்கழக விளையாட்டவையினால் எதிர்வரும் 30-07-98 அன்று மேற்படி உடைபந்தாட்டமும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் நடத்தப்படவுள்ளன.

பங்கு பற்றும் அணிகள்:-

1. யாழ் பல்கலைக்கழக அணி எதிர் பாடும்மீன் வி. க. [குருநகர்]
2. சென் அன்ரனீஸ் வி. க. எதிர் றோயல் வி. க. [ஊறெழு]

சீட்டிழுப்புக்கான பரிசில்கள்:-

1ஆம் பரிசு 5000 ரூபா
2ஆம் பரிசு 3000 ரூபா
3ஆம் பரிசு 2000 ரூபா

நேரம்:- 3-00 மணி
இடம்:- யாழ். பல்கலைக்கழக மைதானம்.

விளையாட்டவை
யாழ். பல்கலைக்கழகம்,

(57700)

## பதவி ஏற்பும் ஒன்றுகூடலும்

யாழ்ப்பாணம், ஜூலை 19

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் 1998 – 1999 ஆம் ஆண்டுக்கான புதிய அங்கத்தவர் பதவி ஏற்பு வைபவமும், ஒன்று கூடலும் இன்று யாழ். வஸ்தியன்ஸ் சைனீஸ் ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக லயன் டாக்டர் கே. ரி. சிவபாதமும் அவரது பாரியாரும் கலந்து கொள்வர்.

புதிய தலைவராக லயன் பா. தவபாலன் இன்று பதவி ஏற்பார். (இ-7)

## நாடகம்

''ஜீவ பிரயத்தனம்'' எனும் நாடகம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10மணிக்கும், பிற்பகல் 2.30 மணிக்கும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் இந்த நாடகத்தை வழங்குகிறது. (இ-ரி)

## உதவி நூலகர் ஒன்றியம்

யாழ். மாவட்டத்தில் நூலக உதவியாளர்களாகப் பணிபுரிவோரின் நலன்களைப் பேணுவதற்காக நூலகஉதவியாளர்கள் ஒன்றியம் அமைக்கப்படவுள்ளது.

உதவி நூலகர்களாகக் கடமையாற்றுவோர் தமது விவரங்களை 'இலக்கம் - 5, யாழ். வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரியில் நேரில் அல்லது தபால் மூலம் பதிவு செய்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உதவி நூலகர்களின் தொழிற் பிரச்சினைகள் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வசதியாக இந்த ஒன்றியத்தை அமைக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## தேசமுற்றமலசலகூடங்கள் புனரமைக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 500 மலசல கூடங்கள் 'யுனிசெவ்' அமைப்பினால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

புனரமைப்புச் செய்யப்பட்ட ஒவ்வொரு மலசல கூடத்துக்குமென 'யுனிசெவ்' ஆயிரம் ரூபா வீதம் வழங்கியுள்ளது.

1995 இல் இடம்பெற்ற இடப்பெயர்வின் பின்னர் பல மலசல கூடங்கள் சேதமடைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5-6)

## சித்திவிநாயகர் கல்வி நிலையம்

மல்லாகம்

## A/L 99, 2000 கலை, வர்த்தக

வகுப்புகள் நடைபெறுகின்றன.

பொருளியல்: திரு. விக்கி (யாழ். முன்னணி ஆசிரியர்)
கணக்கீடு: திரு. D. SAM
வணிகக்கல்வி: திரு. முகுந்தன் (வடமராட்சிமுன்னணி ஆசிரியர்)

A/L 2000 பிரிவுக்கான வகுப்புக்கள் 20-07-98 அன்று ஆரம்பம்.

(சி/4322) – நிர்வாகி

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி

## அன்னம்மா நாகலிங்கம்

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (19-07-98) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
சீதாதேவி விநாயகசேகரம் (மகள்)
நா. இராமலிங்கம் (மகன் - கனடா)

456, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(57696)

## உ
## இலங்கையில் ராகுகால பூஜையை அறிமுகப்படுத்தி ஆரம்பித்து வைத்த சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்

நடத்தும்

## 14 ஆவது ஆண்டு

## ராகுகால ஸ்ரீ துர்க்கா பூஜை
## விஷேட ஸ்ரீ துர்க்கா ஹோமம்

இடம்:- ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்
[ஸ்ரீமான் தம்பையா முதலியார் சத்திரம்]
30, சென் அன்ரனீஸ் மாவத்தை - கொழும்பு-13

காலம்:- 21-07-98, 28-07-98, 04-08-98, 11-08-98.
ஆடிச்செவ்வாய் நான்கு கிழமைகளும்
பிற்பகல் 3. 00 மணி முதல் 5. 30 மணிவரை நடைபெறும்.

இலங்கை இந்துமத குருபீடாதிபதி
''அருள்ஜோதி'' ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்
அவர்களின் அருளாசியுடன்
சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி
டாக்டர் ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் J.P.
(தலைவர், இலங்கை பிராம்மண சமாஜம், தலைவர், இந்துசமய கலாசார முத்தமிழ்ச்சங்கம்)
அவர்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும்.


**உயிருள்ள நாகபாம்புக்கு அபிஷேக பூஜைநடைபெறும். நாகதோஷம் உள்ளவர்கள் நாகபாம்புக்கு பால் அபிஷேகம் செய்து வழிபடலாம்.**

ராகு, கேது, காலசர்ப்பதோஷம், செவ்வாய்தோஷம், மாங்கல்யதோஷம், நாகதோஷம், புத்திரதோஷம் உள்ள சுமங்கலிப் பெண்களும், செவ்வாய் தோஷத்தால் திருமணம் தடைப்பெறுகின்ற கன்னிப் பெண்களும் ஆடிச் செவ்வாய்க்கிழமைகளில் ராகு கால நேரத்தில் தேசிக்காய் விளக்கேற்றி துர்க்கை அம்மனை வழிபட்டு, நாகத்திற்கும், அம்மனுக்கும் பால் அபிஷேகம் செய்து வழிபட்டால் சகல தோஷங்களும் நீங்கப் பெற்று சுகானந்தப் பெருவாழ்வு வாழலாம்.

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்
90/22, ஜோசப் டயஸ் லேன், - புளுமெண்டால் ரோட், கொழும்பு-15,
தொலைபேசி இல. 527025

(சி/ 4323

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 — 10 — 1980 | 19 — 07 — 1994 |

செல்வி

**ஆனந்தலட்சுமி கோபாலபிள்ளை**

[கௌரி]

நிலையாக எம் நெஞ்சில்
ஒளிவீசும் தங்கை நீயே
நீ நிழலாக எம் நினைவில் வருவாயே
மலர்போன்ற உள்தோற்றம்
எம்மண்ணில் மீண்டும் மலராக
மலரும் நாள் எப்போது?
ஆண்டு பல சென்றாலும்
ஆறாது உன் நினைவு!

உன் பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா,
அண்ணன்மார், அண்ணிமார்,
மருமக்கள்.

K. G. கணேசலிங்கம்,
2 ஆம் வட்டாரம், நெடுந்தீவு,
பெரியதுறை.

(57620)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணத்தை நிறுத்துவது மனிதாபிமானமற்ற செயல்

## ஜனாதிபதி சந்திரிகாவுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

''இடம் பெயர்ந்த மக்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணம் அவர்களின் அரை வயிற்றை நிரப்புவதற்கே போதியதாக இல்லை. இந்த நிலையில் நிவாரணத்தை நிறுத்துவது என்பது மனிதாபிமானமற்ற செயலாகும்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

வடக்கில் இடம் பெயர்ந்த சுமார் 34 ஆயிரம் குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை நிறுத்த அரசு முடிவு செய்திருப்பது குறித்து சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழு ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு எழுதிய கடிதத்திலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் முழுமையாக இன்னமும் மீளக்குடியேறவில்லை, வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. பொருள்களின் போக்குவரத்துச்செலவு மக்களிடமிருந்தே அறவிடப்படுகின்றது. பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் இலவசமாக கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டு வருவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் போதியளவு பொருள்களைக் கொண்டுவர முடிவதில்லை. இதனால் முழுமையான சேவையை அவர்கள் மக்களுக்கு வழங்குவதற்கு சாத்தியமாவதில்லை.

விவசாயிகள் தமது பொருள்களை சந்தைப்படுத்துவதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். உற்பத்திப்பொருள்களைக் குறைந்த விலைக்கே அவர்களால் விற்க முடிகின்றது.

மீனவர் பாதுகாப்புக் காரணங்களால் தமது தொழிலை முழுமையாகச் செய்ய முடிவதில்லை. தொழில் இல்லாமையால் அவர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலையற்றிருக்கின்றனர். அவர்களுக்கு தொழில்களை வழங்க ஒரு திட்டமிட்டகால அவகாசத்துடன் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்கவில்லை.

இவ்வாறான நிலைமைகள் இருக்கும் போது வறிய மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணத்தை வெட்டுவது அவர்களை மேலும் துன்பத்துக்குள் தள்ளும் நடவடிக்கையே ஆகும்.

எனவே மக்கள் வாழ்க்கை வழமை நிலைக்குத் திரும்பி வந்தபின்னரே நிவாரணத்தை வெட்டுவது பற்றி அரசு சிந்திக்க வேண்டும்,

இப்படி அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)


உ

அல்வாய் வடக்கு பெரியதம்பிரான்

என வழங்கும்

ஞானாசக்தி முருகப்பெருமானின்

மஹா கும்பாபிஷேக

மண்டலாபிஷேக பூர்த்திப் பெருவிழா

19 - 07 - 1998 ஞாயிற்றுக்கிழமை காலை 1008 சங்காபிஷேகமும் அன்னதானமும் இரவு முருகப் பெருமான் வீதியுலாவும் நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இரவு நிகழ்ச்சி

நாதஸ்வரம்: [ திரு. S. ஜெகநாதன் உடுப்பிட்டி
திரு. கேதீஸ்வரன் இணுவையூர்

தவில் கச்சேரி

திரு. தெ. உதயசங்கர் இணுவையூர்
திரு. N. R. S. ரவீந்திரன் இணுவையூர்
திரு. K. சிவகுமார் நாச்சிமார்கோயிலடி.
திரு. நித்தியானந்தம் இணுவையூர்

அருணாவின்

இன்னிசை கானங்கள்

அனைவரும் வருக.

அல்வாய். - விழாக்குழு

(57694)


## பரிசாரகராக நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றி வந்த 25 சிற்றூழியர்கள் பரிசாரகர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதம் நேற்று வழங்கப்பட்டது. (இ-139)


A/L 2000

இணைந்த கணிதம்

பகுதி

நுண் கணிதம்

A. பத்மநாதன்

ஆரம்பம்: 20-07-98

திங்கள் பி. ப. 3-30

நிரு

கோண்டாவில்.

(55454)



ஜூலை 1998

இன்னிசை நற்செய்திப் பெருவிழா

மீண்டும் உங்களுடன்

தந்தை பெர்க்மான்ஸ்

இயேசுகிறிஸ்துவினால் உங்களுக்கு சமாதானமும் விடுதலையும் கொண்டுவரும்

"ஆறுதலின் தோனி"

ஆறுதலளிக்கும் தேவ கானங்கள்; விசேட ஜெபங்கள்

| இடம் | காலம் | நேரம் |
|---|---|---|
| ★ துரையப்பா விளையாட்டரங்கு யாழ்ப்பாணம் | 15 - 19 | பி. ப. 3. 30 |

குறிப்பு: சனி (18 - 7 - 98), ஞாயிறு (19 - 7 - 98) ஆகிய நாள்களில் கீழ்க்காணும் இடங்களிலிருந்து யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு கட்டணம் அற்ற பஸ்சேவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இந்த பஸ்களில் ''ஆறுதலின் தோனி'' என்ற பெயர்ப்பலகை இடப்பட்டிருக்கும்.

★ அச்சுவேலி, கோப்பாய், கல்வியங்காடு, திருநெல்வேலி, ஒட்டுமடம், கச்சேரி

பஸ் புறப்படும் நேரம்: மாலை 2-30 மணி

உங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்!

பிரவேசம் இலவசம். (இ/4406)


### கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

மலை கண்ணாடித் தொழிற்சாலை முகாமில் தங்கியிருந்த போது பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்தனர்.

எனவே கப்பல் சேவை குறித்து உறுதியான பதில் கிடைக்கும் வரை மன்னார், வவுனியா அகதி முகாம்களில் உள்ள யாழ். அகதிகள் தொடர்ந்து தமது இடங்களிலேயே தங்க வைக்கப் படவேண்டும் என்றும்—

இது தொடர்பான அறிவித்தலைத் தான் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் —

கப்பல் சேவை குறித்து உறுதியான பதில் கிடைத்ததும் ஒரு வார கால அறிவித்தலில் அகதிகள் திருமலைக்கு அழைத்து வரப்படுவர் எனவும் — பிரதேசச் செயலர் எஸ். வேலும் மயிலும் நேற்றிரவு தெரிவித்தார். (இ-7)

### ஆலோசனை...

(முதலாம் பக்கத் தொடர்)

இது குறித்து நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோப்புள்ளேக்கு இம்மாதம் 15ஆம் திகதிய கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரவி கருண நாயக்க இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில், ராஜினாமாக் கடிதத்தின் பிரதி, அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்புக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

ரவி கருண நாயக்க அனுப்பி வைத்துள்ளதாகக் குறிப்பிட்ட கடிதம் தனக்கு இது வரையில் கிடைக்கவில்லை என அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு நாள்களாக தாம் தமது அமைச்சுக்கு சமுகமளிக்கவில்லை எனவும் அவர் நேற்றுத் தெரிவித்தார். (இ-9)

### மழை...

(முதலாம் பக்கத் தொட

தாழமுக்கம் காரண[...] நாட்டின் மேற்கு மற்றும் பிரகமுவ, ஊவா, மத் மாகாணங்களின் தற்போ[...] பெய்து வரும் இடியுட[...] கூடிய மழை தொடர்ந்[...] பெய்யலாம் என வளிமண்[...] வியல் திணைக்களம் நேற்[...] அறிவித்தது. (இ-9-7

### புளொட்...

(முதலாம் பக்கத் தொட

தலைவர் அப்துல்லா, வட — கிழக்கு மாகாணப் பிக்[...] மார் அமைப்பின் பிர[...] சங்க நாயக்கர் சியம்[...] கஸ விமலசாரதேரர் [...] யோர் உட்பட பலர் கல[...] கொண்டு இரங்கல[...] நிகழ்த்தினார்கள். நகர[...] தலைவர் ஜி. ரி. லிங்கந[...] தலைமையில் இந்த இர[...] கூட்டம் நடைபெற்றது.

பிற்பகல் 4-30 மணியள[...] வவுனியா ரம்பைக்குளம் தோலிக்க மயானத்தில் பூதவுடல்களும் பூரண யாதைகளுடன் நல்லட[...] செய்யப்பட்டன.

இதனையொட்டி நே[...] வவுனியாவில் அனைத்[...] கடைகளும் பூட்டப்ப[...] ருந்ததுடன் கறுப்புக் கொ[...] களும், வாழைகளும் கட்[...] பட்டிருந்தன. (இ-9-16

### மாங்குளம்...

(முதலாம் பக்கத் தொ

இடம் பெற்றன.

மாங்குளத்துக்கு வட[...] நேற்று அதிகாலையும்- குஞ்சுக்குளம் பகுதி[...] நேற்றுப் பகலும் மோதல்[...] இடம்பெற்றன என்று [...] விக்கப்பட்டது.

இந்த மோதல்களில் [...] தலைப் புலிகள் தரப்[...] உயிரிழப்பு ஏற்பட்டிரு[...] லாம் என பாதுகா[...] அமைச்சின் நடவடிக்கை[...] தலைமையகம் தெரிவித்[...]

எனினும் இழப்புக்[...] குறித்து ஊர்ஜிதமான [...] வல்கள் எதுவும் கிடை[...] வில்லை. (இ-7-

### அனுமதி...

(முதலாம் பக்கத் தொடர்)

கில் அமைக்கப்பட்டிருந்த கடைகளே இவ்வாறு அக[...] பட்டன.

அதேசமயம் கடைகள் அகற்றப்பட்ட இடத்[...] அதனை அண்டிய பகுதியிலும் மினிபஸ் தரிப்பிடம் [...] அமைக்கப்பட்டுள்ளது.

புறப்படும் நேரங்களில் மட்டுமே மினிபஸ்கள் ந[...] மையப்பகுதிக்கு வந்து பயணிகளை ஏற்றிச் செல்லும் [...] அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9

### சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றினர் என்றும் பா[...] காப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவி[...] தது.

படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையி[...] போது ஆர். பி. ஜி குண்டு -1, கிளைமோர் கண்ணிகள் - 81 எம். எம். குண்டுகள் - 8, 60 எம் எம் குண்டுகள் 5 [...] யவை கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-9


க. பொ த. (உ/த) 1998

பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

நல்லூர், வடமராட்சி

''லயன்ஸ்'' கழகங்களினதும்

அரங்க செயற்பாட்டுக் குழுவினதும் ஆதர[...]

புதிய பாடத்திட்டத்திற்கா[...]

வழிகாட்டற் கருத்தரங்கு

★ விளக்கவுரைகள்
★ செயல் விளக்கங்கள்
★ கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட கையேடுகள் விநியோகம் (Tutorials) இலவசம்
★ சந்தேகங்களுக்கான விளக்கங்கள்

இடம்: நாவலர் மண்டபம்--யாழ்ப்பாணம்.
வடமராட்சி--வட இந்து மகளிர் கல்லூரி

ஆரம்பம்: 21-7-1998

நேர அட்டவணை நாளைய உதயனில்

அரங்க செயற்பாட்டுக் கு[...]

19, பழம் றோட், கந்தர்மடம். (57701)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (ப[...] வற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்[...] ரார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [...] மனையில் 19-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org